மனிதமே முதன்மை!

# முற்றம்

பல்சுவை இதழ்

Mutram monthly July 2014


விலை : ரூ.10/- இல்லம் : 2 சுற்றம் : 9 ஆசிரியர் : விசவனூர் வே. தளபதி




# கச்சத்தீவு

## தமிழருக்கே சொந்தம்

# விசவனூர் வே.தளபதி எழுதிய
# சிறுகதைகள்



மனிதமே முதன்மை!
# முற்றம்
பல்சுவை இதழ்
Mutram monthly July 2014

ஆசிரியர்
**விசவனூர் வே.தளபதி.**
இணை ஆசிரியர்
**அ.வெற்றிவேந்தன்** எம் .ஏ., பி.எல்.,
உதவி ஆசிரியர்கள்
**இமயவரம்பன்** பி.எஸ்சி.,எம் .ஏ.,பி.எல்.,
**அ. உமாமகேசுவரி** எம் .ஏ.,
**பி.எம்.பாலா**
**ஜெ. ராஜா சிங்,**
**ஜெய்**
**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்**
தலைமைச் செய்தியாளர்கள்
**வே. வளையாபதி**
**த. ஞானமணி** பி.எஸ்.சி., பி. எட்.,
செய்தியாளர்கள்
**பொன்முடி** சிவகங்கை
**சு.ஏழுமலை** எம்.ஏ., எம்ஃபில்.,
**க. பவானி** பி.ஏ.,
**சிவக்குமார்** மதுரை
**ரஞ்சித் இமானுவேல்**
**பெ. அர்ஜுன்**
**சாதிக்பாட்சா** கோவை
**மு.கலைச்செல்வன்**
**ஷாம் எர்னஸ்ட்**
**எஸ். கண்ணபெருமாள்**

வடிவமைப்பு
**எழில் வரைகலை**
புகைப்படக்காரர்
**இரமேஷ்**
அலுவலக முகவரி
13/5 புத்தா தெரு, கோடம்பாக்கம் ,
சென்னை 600 024
அலைபேசி : 8056281973, 9444363917.
மின்னஞ்சல்:
mutram2010@gmail.com
இணைய தளம் :
www.mutram.in

MUTRAM
Account No,CA 920493454.
Rangarajapuram branch.
Kodambakkam, chennai

## உள்ளே

தமிழகத்தில் பணியாற்றும் மத்திய அரசு அலுவலர்கள் மீது
இந்தித்திணிப்பு ........ 6

இலக்கணங்களின் வழி நிற்கும்
ஒப்பற்றத் தமிழ்மொழி
இயற்றமிழன் ........ 8

கச்சத்தீவு
ஏழுமலை ........ 11

புலத்தில் வாழும் இலட்சியவாதிகளும்,
தன்மானத் தமிழர்களும் இணைவதை
யாராலும் தடுக்க முடியாது!
கலாநிதி இராம் சிவலிங்கம் ........ 13

புரட்சிக்கவி
பாரதிதாசன்(9) ........ 14

கண்ணீர் பெருக்கு (சிறுகதை)
இருங்கோவள் ........ 16

மதுவை ஒழிப்போம் (சிறுகதை)
இருங்கோவள் ........ 17

சுக்கின் சிறப்பு (மருத்துவம்) ........ 19

இந்தித்திணிப்பை எதிர்த்து
தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போராட்டம் ........ 21

சுக்கு மிட்டாய் பாட்டி (சிறுகதை)
இருங்கோவேள் ........ 25

மாவட்ட நீதிமன்றங்களில்
தமிழ்க்கொடி ........ 29

துளசி விதை (சிறுகதை)
இருங்கோவேள் ........ 31

அநியாய வட்டியைக் கட்டாதீர்கள்
உமாமகேஸ்வரி ........ 33

காசோலை, வரைவோலை
அனுப்புவோர் “mutram” என்ற கணக்கிற்கு
எடுத்தனுப்பலாம்.

# கச்சத்தீவு தமிழருக்கே சொந்தம்



மிகப் பழமையான வரலாறு உண்டு, சிறந்த நாகரிகம் உண்டு, சிறந்த இலக்கியங்கள் உண்டு, உலகின் மிகச்சிறந்த பண்பாடு உண்டு. சிறந்த தத்துவங்கள் உண்டு, உலகப் பொதுமறையான திருக்குறள் உண்டு இப்படி எத்தனையோ உண்டு தமிழுக்கு. ஒன்றுமை என்ற உணர்வும் உண்டு. இந்த உணர்வினால் தமிழராக இருந்த நாம் இந்தியர்கள் என்ற பெயரையும் ஏற்றுக் கொண்டோம். இந்த ஒற்றுமை உணர்வினால் பலம் அதிகரித்ததா, அல்லது பலன்கள் கிடைத்ததா என்றால், அதை எண்ணித்தான் பார்க்க வேண்டும்.

நடுவண் அரசு கச்சத்தீவில் தமிழக மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு அதிகாரம் இல்லை என்று நீதிமன்றத்தில் கூறுவது எப்படி தமிழருக்கு பலமாக, அல்லது பலனாக இருக்கும்? என்பதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும். காசுமீரம் என்னுடையது என்கிறார் பாகிஸ்தான். நாம் எதிர்க்கிறோம் சண்டையிடுகிறோம். தமிழ் நாட்டிலிருந்து காசுமீர எல்லையில் நின்று சண்டையிடுகிறோம். காரணம் நமது மண்ணை அந்நியன் அபகரித்து விடக்கூடாது என்று.

அருணாச்சலப்பிரதேசத்தை சீனா என்னுடையது என்கிறது. நாம் மறுக்கிறோம். எமது மண்ணை மிதித்தால் அறுத்தெறிவோம் என்கிறோம். நாம் வீணாக சண்டைக்குச் செல்லவில்லை. நம்மை, நமது உரிமையை பிறன் எடுக்க முயன்றால், அபகரிக்க முயன்றால் நமது உயிரையும் துச்சமாக மதித்து விரட்டி அடிக்கிறோம்.

நமது நாடு 1947 இல் சுதந்திரம் பெற்று 1950 இல் நமக்கென்ற சட்டங்கள் ஏற்படுத்தி இயங்கி





வருகிறோம். இதற்கிடையில் மண்மீறல்கள் வந்தபோது அதற்கான பல போர்களை நடத்தியும் உள்ளோம். இந்நிலையில் நமது மண்ணை முக்கியமாக தமிழரின் மண்ணை சிங்களக் காடையர்களுக்கு தாரை வார்த்தது எந்த விதத்தில் சரியானதோ தெரியவில்லை. காரணம் இரு நாடுகளில் சீரான உறவிற்கு என்று சொல்லப்படுகிறது. அந்த நாடு என்ன வல்லரசா? அவனுக்கு ஏன் கொடுக்க வேண்டும்.

அந்த அரசு உண்மையான அந்நாட்டு குடிகளான தமிழ்க் குடிகளை சமமாக நடத்துகிறதா? எந்த ஒரு பயனும் இன்றி, இந்தியத்தின் இதயமான தமிழர் களை துன்புறுத்துவதே கொள்கையாக வைத் திருக்கிற சிங்களவனுக்கு கச்சத்தீவைக் கொடுத் தது எந்த விதத்தில் சரியான செயலாகும்.

இராமநாதபுர சேதுபதிகளின் சொத்தான கச்சத்தீவை, அவர்களிடமிருந்து பறித்து, தமிழர் களைக் கேட்காமல், இதனால் என்ன தீங்கு வரும் என்று யோசிக்கமால் சிங்களவனுக்கு தானம் செய்தது எந்த விதத்தில் சரியாகும்? அண்டை நாட்டின் நட்புறவுக்காக கச்சத்தீவைக் கொடுத்த இந்திய அரசு, காசுமீரத்தையும் அருணாசலப் பிரதேசத்தையும் ஏன் கொடுக்கவில்லை. வட இந்தியத்தில் இருப்பவர்களை ஏமாற்ற முடியாது, தமிழனை ஏமாற்றி விடலாம் என்ற எண்ணம் தானே காரணம்.

உண்மையான தேச பக்தி இந்திய அரசுக்கு உண்டு என்றால் கச்சத் தீவை இந்தியாவுடன் இணைத்தே ஆக வேண் டும். நல்ல உறவை பேணிக்காக்க வேண்டும் என்ற நோக்கில் கச்சத்தீவு கொடுக்கப்பட்டது என்று சொல்வதை நாம் ஏற்றுக் கொண்டாலும், இப்போது அங்கே நடப்பது என்ன? சீனா அங்கே இராணுவ தளத்தை ஏற்படுத்தி யுள்ளது. அந்த நாட்டுடன் மிகவும் நெருக்கமாகி விட்டது. பாகிஸ்தானு டனும் நெருக்க மான உறவிலே இருக்கிறது.

பிறகு எப்படி அந்த நாடு நமது நட்பு நாடாக இருக்கும். வார்த்தைக்கு வேண்டுமானால் இலங்கை நட்பு நாடு என்று சொல்லிக் கொள்ள லாம். நான் கேட்கும் போதெல்லாம் எனக்கு வேண்டியதை நீ செய்து கொண்டிருக்க வேண்டும் என்று பிசாசு பிடித்தவன் கேட்பது போல் இலங்கை கேட்டுக் கொண்டிருக்கும். அவனைப் பிடித்திருப்பது பிசாசா, அல்லது ஏமாற்று வேலையா என்பதைத் தெரியாமலேயே இலங்கைக்கு இந்தியா உதவிகளைச் செய்து கொண்டே இருக்கும். இதுதான் இதுவரை நடந்து கொண்டிருக்கிறது.

புதிய தலைமை அமைச்சர் இந்திய நாட்டின் மீது மிகவும் பற்றுக் கொண்டவர். இந்தியா, எல்லா மதங்களும் சமம் என்று முழக்கமிடுகிற நாடாக இருந்தாலும், நான் ஒரு இந்து என்று துணிச்சலாகச் சொல்லக்கூடியவர். இப்படிப் பட்டவரின் ஆட்சியிலாவது நமது உரிமையான கச்சத்தீவு நமக்கு வந்து சேருமா? பொறுத் திருந்து தான் பார்க்க வேண்டும்.

◆

# தமிழகத்தில் பணியாற்றும் மத்திய அரசு அலுவலர்கள் மீது இந்தி திணிப்பு சட்டத் திருத்தம் வலியுறுத்தி போராட ஊழியர்கள் முடிவு

தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் 1.50 லட்சம் பேர் பணியாற்றுகின்றனர். அவர்களிடம் இந்தி மொழியைத் திணிக்கும் முயற்சியை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது. இது தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் கடும் அதிர்ச் சியை ஏற்படுத்தியுள்ளது. அதைத் தடுத்து நிறுத் தும் நடவடிக்கையை தமிழ் ஆர்வலர்கள் தொடங்கியுள்ளனர். தமிழகத்தில் இந்தி எதிர்ப்பு போராட்டம் 1965ஆம் ஆண்டு உச்சகட்டத்தை எட்டியது.

1957ஆம் ஆண்டு பிரதமராக இருந்த நேரு, இந்தி பேசாத மாநிலங்களில் இந்தி மொழியை திணிக்க மாட்டோம் என்று உறுதியளித்தார். அடுத்து வந்த லால் பகதூர் சாஸ்திரியும் இதே உறுதிமொழியை அளித்தார். அதன் பிறகு மாநிலங்களில் செயல்படும் மத்திய அரசு அலுவலகங்களில் நேரடியாக இந்தியை பயன்படுத்த வேண்டும் என்று யாரும் வற்புறுத்தவில்லை. ஆனால் இப்போது பாஜ அரசு பதவி ஏற்ற பின்பு இந்தி மொழித் திணிப்பு தீவிரமாகியுள்ளது. தமிழகத்தில் பணியாற்றும் இந்தி மொழி படிக்காத மத்திய அரசு அலுவலர்கள் 11 பேருக்கு மெமோ கொடுக்கப்பட்டுள்ளது தமிழ் ஆர்வலர்கள் மத்தியில் கடும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.



இவர்களின் விளக்கம் ஏற்று கொள்ளாத பட்சத்தில் சம்பந்தபட்டவர்களை சஸ்பெண்ட் செய்யவோ அல்லது டிஸ்மிஸ் செய்யவோ சட்டத்தில் இடமுள்ளது. அதாவது ஆட்சி மொழிச் சட்டம் 1963ல் பிரிவு 4.1, 4.2 ஆகியவற்றில் குறிப்பிட்டுள்ளபடி, ‘மத்திய அரசு அலுவலங்களில் எந்த வேலைக்கு வந்தாலும் இந்தி மொழியை கட்டாயம் படித்தே ஆக வேண்டும். அப்படி இல்லாதபட்சத்தில் கடமை தவறியர்கள் என்ற ரீதியில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கலாம்’ என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வளவு காலமும் இந்தச் சட்டம் அமைதி காத்தது. இப்போது பாஜ அரசு பதவி ஏற்ற உடன் இச்சட்டத்தை முழுமையாக செயல்படுத்த தொடங்கியுள்ளது.

இச்சட்டத்தின் கீழ், இதுவரை தமிழகத்தில் பணியாற்றும் மத்திய அரசு அலுவலர்கள் 11 பேர் மீது நடவடிக்கை எடுத்துள்ளனர். இதிலிருந்து தப்பிக்க பலர் உடம்பு சரியில்லை உள்ளிட்ட பல்வேறு காரணங்களைக் கூறியுள்ளனர். தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலக நிர்வாகத்

*தில் உள்ள ஆவணங்கள் பல தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ளது. வரவு, செலவு கணக்குகளும் அப்படி இருக்கும் போது இந்தி படிக்க வேண்டிய அவசியம் எங்களுக்கு இல்லை என்பது மத்திய அரசு அலுவலர்களின் எண்ணமாக உள்ளது.*

*நடவடிக்கை எடுப்பதற்கான சட்டம் இருப்பதால் தான் அவ்வப்போது இந்த பிரச்சனை எழுகிறது. எனவே இந்தச் சட்டத்தை திருத்தம் செய்ய மத்திய அரசு முன்வர வேண்டும் என்றும், அதைச் செய்யாவிட்டால் ஒட்டுமொத்தமாக போராட்டத்தில் ஈடுபடவும் மத்திய அரசு அலுவலர்கள் முடிவு செய்துள்ளனர்.*

*இதுகுறித்து தமிழகத்தில் உள்ள மத்திய அரசு அலுவலகங்களில் பணியாற்றும் அலுவலர்கள் கூறியதாவது:*

*இந்தி மொழியைப் படிக்க பணி நேரத்தில் தனி பயிற்சி வகுப்புகள் நடத்துகின்றனர். இதற்காக கோடிக்கணக்கில் பணம் செலவழிக்கப்படுகிறது. அதற்கான தேர்வில் பாஸ் செய்தால் ஒரு இன்கிரிமென்ட் கூடுதலாக தருகின்றனர். பதவி உயர்வு உத்தரவு, ஓய்வு பெறும் உத்தரவு போன்றவைகள் அனைத்தும் இப்போது இந்தியில் தான் தருகின்றனர்.*

*அதில் கையெழுத் திடும் அதிகாரிகள் கூட இந்தியில் தான் கையெ ழுத்திடுகின்றனர். அவர் யார் என்பதை கூட வாசிக்க தெரியவில்லை.*

*மேல் அதிகாரிகளுக்கு அனுப்பக் கூடிய கடிதங்கள் முதல் ஆவணங்களை இதுவரை ஆங்கிலத்தில் தான் அனுப்பி வந்தோம். இப்போது இந்தியில் தான் அனுப்ப வேண்டும் என கட்டாயப்படுத்துகின்றனர். இப்படியே சென்றால் இந்தி மொழியை படித்தால் மட்டுமே இங்கு பணிபுரிய முடியும் என்ற நிலை ஏற்படும்.*

*எனவே இதற் கான சட்டத்தில் திருத்தம் கொண்டு வர வலியு றுத்தி போராட முடிவு செய்துள்ளோம். அதற் காக ஆலோசனை நடத்த திட்ட மிட்டுள்ளோம்.*

◆



# காங்கிரசு பாதையில் பாஜக

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் தண்டனை அனுபவித்து வரும் முருகன், சாந்தன், பேரறிவாளன் ஆகியோரை விடுவிக்க ஐக்கிய முற்போக்கு கூட்டணியை போன்றே தானும் எதிர்ப்பு தெரிவிக்க பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி அரசு முடிவு செய்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகியோருக்கு 2001ம் ஆண்டு மரண தண்டனை விதிக்கப்பட்டது.

ஆனால் அவர்களின் கருணை மனு மீது தாமதமாக பதில் அளிக்கப்பட்டதால் அவர்களின் தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைத்து உச்ச நீதிமன்றம் கடந்த பிப்ரவரி மாதம் 18ம் தேதி தீர்ப்பு வழங்கியது. இதையடுத்து ராஜீவ் வழக்கில் கைதான சாந்தன், முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்கப் போவதாக முதல்வர் ஜெயலலிதா கடந்த பிப்ரவரி மாதம் 19ம் தேதி அறிவித்தார்.

மேலும் இது குறித்து மத்திய அரசு 3 நாட்களில் பதில் அளிக்கவில்லை என்றால் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள் என்று ஜெயலலிதா தெரிவித்தார். இதையடுத்து அவர்களை விடுவிப்பதை எதிர்த்து காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசு பிப்ரவரி 20ம் தேதி உச்ச நீதிமன்றத்தை அணுகியது.

ஒரு நாட்டின் பிரதமரை கொலை செய்தவர்களை விடுவிக்கவே கூடாது என்று அது நீதிமன்றத்தில் தெரிவித்தது. இதையடுத்து ஏப்ரல் 25ம் தேதி இந்த வழக்கை 5 நீதிபதிகள் அடங்கிய அரசியல் சாசன பெஞ்சிற்கு உச்ச நீதிமன்றம் மாற்றியது. இது குறித்து வரும் செவ்வாய்க்கிழமை விசாரணை நடத்தப்படுகிறது. அன்றைய தினம் பாஜக தலைமையிலான மத்திய அரசு சாந்தன், முருகன் உள்ளிட்ட 7 பேரை விடுவிக்க எதிர்ப்பு தெரிவிக்க உள்ளது.


பாஜக என்னதான் காங்கிரஸுக்கு எதிராக தேர்தல் பிரச்சாரத்தின்போது பேசினாலும், தமிழக அரசுடன் சுமூகமான உறவை வைத்துக் கொள்ள முயன்றாலும் ராஜீவ் காந்தி வழக்கில் ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசின் நிலையையே எடுக்க உள்ளது.

◆

**சொல்லின் திரிபு.**

ஒரு சொல்லின் அடுத்தடுத்து நிற்கும் பல ஒலிகளும் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு முயற்சி பற்றிப் பிறப்பனவாக இருப்பின், ஒலிக்கும் முயற்சி அரிதாகும். அடுத்து நிற்கும் ஒலிகள் ஓர் இனமாக...பிறப்பிடத்தாலும் முயற்சியாலும் ஒத்திருப்பனவாக அமையின், ஒலிக்கும் முயற்சி எளிதாகும். அதனால், ஓர் ஒலியை அடுத்து வரும் மற்றோர் ஒலி அதற்கு ஏற்பத் திர்தல் உண்டு என்பதைக் கண்டோம். அது, தனி ஒலியின் திரிபு பற்றிய பகுதியாகும். பல ஒலிகள் சேர்ந்து அமைந்த ஒரு சொல்லில் சில ஒலிகள் ஒலிக்கப்படாமல் விடப்படுதலும் உண்டு. இது சொல்லின் திரிபு எனப்படும். இதுவும் முயற்சி எளிமை அல்லது முயற்சிகள் சுருக்கம் கருதி ஏற்படுவதே என்பதை இனிக்காண்போம்.

முன்னோர் ஒலித்தவாறே நாம் இன்று சொற்களை ஒலிப்பதில்லை. சொற்கள் பலவகை மாறுதலை அடைந்தே இன்று வழங்கும் நிலைக்கு வந்திருக்கின்றன. இக்காலத்திலேயே கற்றவர் வழங்கும் சொற்களுக்கும் கல்லாதவர் வழங்கும் சொற்களுக்கும் வேறுபாடு உள்ளது. இருக்கின்றது என்ற சொல் இருக்குது என்றும் கீது என்றும் இருக்கு என்றும் பல்வேறு



வகையாக ஒலிக்கப்படுகிறது. கற்றவர் ஒருவர் அதே சொல்லை வெவ்வேறி டத்தில் வெவ்வேறு வகையாக வழங்குகின்றார். மேடையில் நின்று சொற்பொழிவாற்றும்போது இருக்கின்றது அல்லது இருக்கிறது என்று ஒலிக்கிறார்: அவரே, நண்பர்களோடு அளவளா வும்போது இருக்குது என்று வழங்கி, தம் குழந்தையோடு கொஞ்சும்போது இக்குது என்கிறார்.

சிதல் என்னும் பழஞ்சொல் பிற்காலத்தில் செல் ஆயிற்று. பண்டைக்காலத்தில் யாறு, யானை என்று வழங்கிய சொற்கள் பலவும் இன்று ஆறு, ஆடு, ஆனை என வழங்கி வருகின்றன. அவ்வாறு வழங்குவனவற்றிற்கு இலக்கணமும் இடந்தரலாயிற்று. தனிச்சொற் களே அல்லாமல் சோழநாடு, மலைநாடு முதலான தொடர்களும் சோணாடு மலாடு என வழங்குவதற்கு இலக்கணம் இடம் வகுத்து, மரூஉ எனக் குறித்தது. *(தொல். எழுத்து,483)*

இவ்வாறு சொற்கள் திரியும் திரிபுகளை ஆராய்ந்தால், அவற்றின் வடிவம் வரவரக் குறுகி வருதல் காணப்படும். இவ்வாறு குறுகிக் குறுகியே இறுதியில் ஓரசை ஈரசைச் சொற்களாக நின்றன. தமிழில் மிகப் பழங்காலச் சொற்களெனச் சங்க இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் பலவும் ஓரசை ஈரசைச் சொற்களாகவே உள்ளன. சீன மொழியிலும் ஆங்கில மொழியிலும் இன்றும் இத்தகைய சிறு சொற்களே பலவாக உள்ளன.

ஆயின், தமிழில் பழங்காலத்திலேயே ஏற்பட்ட எழுத்துமுறையும் இலக்கியமும் சொற்களைக் குறுக்கும் பழக்கத்திற்குப் பெருந்தடையாக நின்றன என்று கூறலாம். இது பல மொழிகளுக் கும் பொருந்திய உண்மையே ஆகும்.

பேச்சு மொழி சொற்களைக் குறுக்குதலே கடமையாகக் கொண்டிருக்க, எழுத்து மொழி சொற்களின் வடிவம் சிதையாவாறு காத்தலே கடமையாகக் கொண்டு விளங்குகின்றது. ஆயினும், இந்தக் கட்டுப்பாட்டையும் மீறியே சில சொற்கள் குறுகி அமைந்துவிடுகின்றன. ஆச்சு போச்சு முதலான சொற்கள் இவ்வாறு தப்பித் தவறி இடம் பெறுவன எனலாம்.

பேச்சுக் கருவியாகிய உறுப்புக்கள் வேறு பல தொழில்களுக்கும் உரிய கருவிகளாக உள்ளன. அதனால் சொற்கள் ஒலிக்கப்படும்போது, ஒலி திரிய நேர்கின்றது. இதழ் நா முதலியவற்றிற்குப் பலவகை உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் தொழிலும் அமைந்திருக்கின்றது. ஆகவே, ஒரு சொல்லை ஒலிக்கும் போது, உணர்ச்சி அற்று அமைந்திருக்கும் நிலையாயின், உறுப்புக்கள் அந்தச் சொல்லைத் தெளிவுற இயல்பாக ஒலிக்கும். ஆயின் அதே நேரத்தில் உணர்ச்சி ஒன்றைப் புலப்படுத்த நேர்ந்தால், அதற்கு ஏற்ற வாறு இதழ் நா முதலியவை மாறி அமைவதால், ஒலியில் சிறு மாறுதல் ஏற்படும்.

அமைதியாய் இருந்து 'இல்லை' என்பதை ஒலிக்கும்போது அதன் இயல்பான ஒலி கேட்கப் படும். சினத்துடன், அல்லது பதற்றத்துடன் ஒலிக்கும் போது அந்த ஒலி ஓரளவு மாறும், வேடிக்கை யாக, அல்லது, எள்ளல் குறிப்புடன் ஒலிக்கும் போது மற்றொரு வகையான சிறு மாறுதல் நேரும்.

'உவகை' என்பதை உணர்ச்சியின்றி ஒலித்தல் எளிது ஆயின், முகம் மலர்ந்து இதழ்கள் மகிழ்ச்சி தவழ விரிந்து ஒலிக்கும்போது, அந்தச் சொல்லின் உகர உயிரை நன்கு ஒலித்தல் இய லாது. இதழ் குவியும் முயற்சி அந்நிலையில் அரிது.

ஆதலின், 'ஒகை' என்னும் திரிபு நேர் கின்றது. உணர்ச்சியே வடிவாக விளங்கி வளரும் குழந்தைகளின் பேச்சில் இத்தகைய திரிபுகள் பலவற்றையும் காணலாம். கண்ணீர் கலங்கி விம்மி அழும் குழந்தையின் வாயில் பிறக்கும் சொற்கள் ஒரு வகையாக ஒலிக்கப்படும். அந்தக் குழந்தை இன்புருவாக ஆரவாரம் செய்து பேசும்போது, அந்தச் சொற்களே பல மாறு தலுடன் ஒலிக்கப்படு தலைக் கேட்கலாம்.

இவை ஒருபுறம் நிற்க, பேசிப் பேசிப் பழகிய பின், நா முதலிய உறுப்புக்கள் சொற்களைக் கவலை இல்லாமல் ஒலிக்கத் தொடங்குகின்றன. எந்தத் தொழிலையும் முதலில் கற்றுச் செய் கின்றவர் பொறுப்புணர்ச்சி மிக்கவராய்க் கவலை யுடன் செய்வர். அவர் தவறு செய்யின், அது அறியாமையால் செய்யும் தவறு எனப்படும். ஆயின் அந்தத் தொழிலைக் கற்றுத் தேறியவர்க் குப் பொறுப்புணர்ச்சி குறைகின்றது. அவர் கவலை இல்லாமல் கடமையைச் செய்கின்றார். அவர் செய்யும் தவறு, கவலை இன்மையால் செய்யும் தவறே அன்றி, அறியாமையால் செய்யும் தவறு அன்று. சைக்கிள் விடக் கற்பவன் நிலை வேறு, அதில் தேர்ந்தவன் நிலை வேறு, தேர்ந் தவன் கவலை இல்லாமல் செலுத்துகின்றான், குறித்த இடத்திற்குப் போவதுமட்டுமே அவன் நோக்கமாகின்றது. பேசிப் பழகியபின், மக்களுக்கு இதே மனநிலை ஏற்படுகின்றது.

ஒவ்வோர் ஒலி யையும் விடாமல் திருத்தமாக ஒலிக்க வேண்டும் என்று பேசுவோன் முயல்வதில்லை. கேட்போன் தன் கருத்தை உணர்ந்தால் போதும் என்று அவன் ஒலிகளைப் பற்றி அவ்வளவாகக் கவலை யில்லாமல் பேசுகின்றான். கேட்பவனுக்குத் தெளிவாக விளங்காமல் ஐயம் நேரும் எல்லை வரையில் மற்றொரு முறை அதையே சொல்லு மாறு அவன் கேட்கக் கூடிய எல்லை வரையில் கவலையில்லாமல் வேகமாகப் பேசும் வழக்கம் உள்ளது.

It is safe to say that we speak as rapidly and with as little effort as possible approaching always the limit where our interlocusters ask us to repeat out ulterance, and that a good of sound-change is in somway connected with this factor- bloomfield, language,p.386 அதனால்தான் சொற்கள் உருவம் திரிகின்றன. வரவரக் குறுகி நிற்கின்றன.

**தொடரும்.**

## மாறி வரும் இளைய தலைமுறை



இளையதலைமுறை என்பவர்கள் எல்லாக் காலத் திலும் இருப்பவர்கள்தான். ஒரு காலத்தில் இளைய தலை முறையினராக இருந்தவர்கள் இப்போது இல்லை. சிலர் முதியவர்களாக இருக்கிறார்கள்.

எக்கால இளைய தலைமுறையினராக இருந்தாலும் அவர்களிடம் மாற்றங் கள் இருந்துதான் இருக்கும். ஆனால் தற்கால இளைய தலைமுறையினரிடத்தில் மாற்றங்கள் என்பது அதிகம்.

தற்போது இருக்கும் இளைய தலைமுறையினர் மாறி வருகிறார்கள் என்பது முற்றிலும் உண்மை. கடந்த காலங்களில் வரலாறு அறிந்தவரை இளைய தலை முறையினர் போல் பெரிதாக மாற்றத்தை நோக்கி நடந்தவர்கள் அல்ல. ஆனால் தற்போது இருக்கும் இளைய தலைமுறையினர் மாற்றங்களுக்கு அடிமைக ளாகவே மாறிவிட்டனர் என்று சொன்னால் அது மிகை அல்ல.

அறிவியல் கண்டுபிடிப்புகள் இளைய தலைமுறை யினர் மாறுவதற்கு மிக முக்கிய காரணியாக இருக்கின் றன. அவைகள் நன்மை பயப்பதோடு, தீமைகளையும் இளைய சமுதாயத்தினரிடம் மிக விரைவாகவே கொண்டு போய்ச் சேர்க்கின்றன.

தற்கால இளைய தலைமுறையினர் அறிவில் மிகச் சிறந்து விளங்குகின்றனர். அதே வேளை, அதைச் சரியாக பயன்படுத்தாமல் அழிவு நோக்கியும் சென்று விடுகின்றனர். மனிதப் பண்புகளை மறக்கும் மாற்றங் களையும் ஏற்றுக் கொள்கிறார்கள்.

மாற்றம் என்பது இயல்பான ஒன்றுதான் என்றாலும் மனித சமூகத்திற்கும் இவ்வுலக உயிர்களுக்கும் ஆபத் தில்லாத ஒரு மாற்றத்தை ஏற்றுக்கொண்ட இளைய தலைமுறையினர் மாறினால் இவ்வுலகம் வாழும்.

# கச்சத்தீவு?

**ஏழுமலை**

சென்னை உயர்நீதிமன்றத்தில் மீனவர் நல அமைப்பின் தலைவர் பீட்டர்ராயன் பொதுநல வழக்கு ஒன்று தாக்கல் செய்தார். அதில், கச்சத்தீவு அருகே மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்களை இலங்கை இராணுவம் சுட்டுக்கொலை செய்தும் கைது செய்தும் துன்புறுத்துகிறது.

எனவே, கச்சத்தீவு பிரச்சனைக்கு நிரந்தரத் தீர்வுகாண வேண்டும் என்று கூறியிருந்தார். இந்த மனுவுக்கு மத்திய வெளிவிவகாரத்துறை அமைச்சகம் ஏற்கனவே பதில் மனு தாக்கல் செய்துவிட்டது.

இந்த பதில் மனுவுக்கு மனுதாரர் பதில் மனு தாக்கல் செய்தார். இந்த நிலைமையில் இந்த வழக்கு தலைமை நீதிபதி (பொறுப்பு) சத்தீஷ் குமார் அக்னிகோத்ரி, நீதிபதி எம்.எம்.சந்தரேஷ் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் தாக்கல் செய்த பதில் மனுவுக்கு மத்திய வெளிவிவகாரத்துறை துணைச் செயலாளர் விஸ்வேஷ் நீகி பதில் மனு தாக்கல் செய்தார். அதில் அவர் கூறியிருப்பதாவது:

இந்தியா இலங்கை கடல் எல்லை 1974 மற்றும் 1976 ஆகிய ஆண்டுகளில் இருநாடுகளுக்கு இடையே நடந்த ஒப்பந்தங்களின் அடிப்படையில் வரையறை செய்யப்பட்டு விட்டது. சர்வதேச சட்டத்தின்படி, இந்த ஒப்பந்தங்களை இருநாடுகளும் மதித்து செயல்பட வேண்டும். அதே போல ஒப்பந்தங்களில் இந்தியாவோ, இலங்கையோ எந்த ஒரு திருத்தத்தையும் தன்னிச்சையாகக் கொண்ட வர முடியாது.

ஆனால், இந்த ஒப்பந்தங்களை மனுதாரர் தவறாக இந்த நீதிமன்றத்திற்கு விளக்கி, வழக்குத் தொடர்ந்துள்ளார். இந்த ஒப்பந்தங்களின்படி, தமிழக மீனவர்கள் மற்றும் பக்தர்கள் கச்சத் தீவுக்கு விசா இல்லாமல் செல்ல முடியும். அங்குள்ள தேவாலயத்தில் வழிபாடு நடத்தலாம்.



மீனவர்கள் தங்களது மீன்பிடி வலைகளை அங்கு காயவைக்கலாம். ஓய்வு எடுக்கலாம். மற்றபடி, கச்சத்தீவுப் பகுதிகளில் மீன்பிடிக்கும் உரிமை எதுவும் தமிழக மீனவர்களுக்குக் கிடையாது.

இந்த ஒப்பந்தம் குறித்து மக்களவையில் 1976ஆம் ஆண்டு வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஒய்.பி.சவான், 1992ஆம் ஆண்டு மேலவையில் மத்திய வெளிவிவகாரத்துறை செயலாளரும் அளித்த விளக்கத்தில், இந்தியா இலங்கை அகிய நாடுகளில் கடல் எல்லை வரையறை செய்யப்பட்டுவிட்டது. இருநாட்டு மீனவர்களும், தங்களது நாட்டின் எல்லையைத் தாண்டி மீன் பிடிக்கச் செல்லக்கூடாது.

இந்திய மீனவர்கள் மற்றும் பக்தர்கள், தங்களது பாரம்பரிய உரிமைகளின்படி கச்சத்துவுக்குச் சென்று ஓய்வு எடுக்கலாம், வலைகளைக் காயவைக்கலாம், அங்குள்ள புனித அந்தோணி யார் தேவாலயத்துக்குச் சென்று வழிபடலாம் என்று தெளிவாகக் கூறியுள்ளனர்.

அதேபோல இருநாடுகளுக்கு இடையே நடந்த ஒப்பந்தம் பிரிவு 6 இன்படி, பாரம்பரிய கப்பல் உரிமை என்பது வர்த்தக கப்பலைத்தான் குறிக்குமே தவிர மீன்பிடி படகினைக் குறிக்காது. இந்த விதிகளில் கூறப்பட்டுள்ளவைகளை வைத்து, மீன்பிடி உரிமை உள்ளது என்று மனுதாரர் கூறுவதைச் சட்டப்படி ஏற்க முடியாது. 2011ஆம் ஆண்டு ஆகஸ்டு 26 ஆம் தேதி பாராளுமன்றத்தில் அப்போதைய வெளி விவகாரத்துறை அமைச்சர் பேசும்போது, கச்சத் தீவு அருகே மீன்பிடிக்கும் உரிமை இந்திய மீனவர் களுக்குக் கிடையாது என்று தெளிவுபடுத்தி யுள்ளார்.

அதே போல 1976 ஆம் ஆண்டு இந்திய வெளிவிகாரத்துறைச் செயலாளர் கெவால்சிங், இலங்கைப் பாதுகாப்பு மற்றும் வெளிவிவகாரத் துறை செயலாளர் டபிள்யூ.டி.ஜெயசிங்கே ஆகியோரிடையே நடந்த கடிதப் பரிமாற்றங் களில், இந்திய மீனவர்கள் கச்சத்தீவு அருகே மீன் பிடிக்கக்கூடாது என்றும் இலங்கை மீனவர்கள் இந்திய கடல் எல்லைக்குள் மீன் பிடிக்கக்கூடாது என்றும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், இலங்கை இராணுவம் தமிழக மீனவர்கள் மீது நடத்தும் தாக்குதல் குறித்து மனுதாரர் வழக்கில் குறிப்பிட்டுள்ளார். இந்த விவகாரத்தில் தமிழக மீனவர்கள் மீது ஆயுதத் தாக்குதல்களை நடத்தவோ, மீனவர்களைத் துன்புறுத்தவோ கூடாது என்று இலங்கை அரசை இந்திய அரசு தொடர்ந்து நிர்ப்பந்தம் செய்தது,

இதனால் கடந்த 2011 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் இந்திய மீனவர்கள் இலங்கை ராணுவத்தால் சுட்டுக்கொலை செய்யப்பட்டதாக எந்த ஒரு சம்பவமும் நடை பெறவில்லை. மேலும் இது தொடர்பாக இந்த நீதிமன்றத்தில் முன்பு வழக்கு தொடரப்பட்டது.

இந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் கடந்த 2012 ஆம் ஆண்டு நவம்பர் 2ஆம் தேதி பிறப்பித்த தீர்ப்பில் நாட்டின் வெளிவிவகாரப் பிரச்சினை யில் நிதிமன்றம் தலையிட முடியாது, அதுவும் எல்லை தாண்டி மீன்டிபிடிக்கச் செல்பவர்களை அப்பாவிகள் என்று கருத முடியாது. எனவே இலங்கை இராணுவத்தால் சுட்டுக்கொல்லப் பட்ட மீனவர்களுக்கு மத்திய அரசு இழப்பீடு வழங்க உத்தரவிட வேண்டும் என்ற மனுதாரர் கோரிக்கை ஏற்கமுடியாது என்று கூறியுள்ளது.

மேலும், இலங்கை இந்தியா கடல் எல்லை என்பது ஏற்கனவே வரையறை செய்யப்பட்டு, முடிந்துபோன விசயமாகும். எனவே, கச்சத்தீவில் மீன்பிடிக்கும் உரிமை தமிழக மீனவர்களுக்கு உள்ளது என்பதை சட்டப்படி ஏற்க முடியாது. எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. இதையடுத்து இந்த வழக்கு விசாரணையை 2 வாரத்துக்கு தள்ளிவைத்து நீதிபதிகள் உத்தர விட்டுள்ளனர்.

◆

# “புலத்தில் வாழும் இலட்சியவாதிகளும், தன்மானத் தமிழர்களும் இணைவதை யாராலும் தடுக்க முடியாது”

## கலாநிதி இராம் சிவலிங்கம்



விலங்குகள் அகற்றப்பட்டு விடுதலையான எம் ஈழத்தாயின் மடியிலே; உங்களோடு சேர்ந்து நானும் அயர்ந்து உறங்க வேண்டும் என்ற ஆவலில்தானே எமது அரசியல் போரை முன்னெடுத்துச் செல்லவல்ல தகமையும், தகுதியும் கொண்ட தன்மானத் தமிழரை இணைந்து செயற்பட வருமாறு பல முறை அறைகூவினேன். நீதி வேண்டும் உலகம் எமக்காக போராடும்போது, எமது பங்கை நாம் செய்யத் தவறினால், எமது சந்ததி எம்மை மதிக்குமா அல்லது மன்னிக்குமா? என் வருந்தியவேளை சிங்கள அரசின் அறிக்கை வெளியானது.

பதினாறு அமைப்புக்களையும், அவற்றைச் சார்ந்த நானூற்றி இருபத்தி நான்கு உறுப்பினர்களையும் பயங்கரவாதிகள் என சித்தரிக்கும் சிங்கள அரசின் பட்டியலில்; தேவை காரணமாக சிலர் சேர்க்கப்பட்டதும், அதிலும் மேலான காரணத்திற்காக பலர் நீக்கக்கப் பட்டதும் ஆச்சரியமானதல்ல. ஆனால், இந்த அறிக்கையும் பட்டியலும், சிங்கள அரசின் பதட்ட நிலையை தெளிவாகக் காட்டியதுதான் ஆச்சரியமானது.

எமக்குத் தேவையான அடையாளத்தை முள்ளி வாய்க்கால் தந்து ஐந்து ஆண்டுகளாகியும் தேசமீட்புக் கான எதையுமே செய்யாது, மற்றவர்களையும் செய்ய விடாது, புலம்பெயர் மக்களின் உணர்வுகளைக் கட்டிப் போட்ட இந்த அணிகளும், அதன் தலைமைகளும் பயங் கரமான கில்லாடிகளேயன்றி அவர்கள் பயங்கரவாதிகள் அல்ல என்ற உண்மையைக்கூட இந்த சிங்கள அரசால் புரிய முடியவில்லையா? ஆண்டுக்கு ஒரு மகாநாடும், வருடத்திற்கு இரண்டு இராப் போசனமும் நடாத்துவதே தேசமீட்புக் கான அரசியல் போராட்டம் என் நம்பி செயற் படும் அந்த அப்பாவிகள் பயங்கரவாதிகளா?

சிங்கள அரசின் பட்டியலில் குறிப்பிட்ட அமைப்புக் களும், சங்கங்களும் அதில் அங்கம் வகிக்கும் தமிழர் களும் பயங்கரவாதிகளென்றால், அவர்களுக்கு தஞ்சம் கொடுத்த நாடுகளையும், அந்த அமைப்புகளை சட்டபூர் வமாக இயங்க. அனுமதி வழங்கிய அரசுகளை யும் மனிதமே இல்லா சிங்கள அரசு அவமதிப்பதாக உங்க ளுக்குத் தோன்றவில்லையா?

ஐ.நா.சபையின் மனித உரிமை மீறலுக்கான சர்வ தேச விசாரணை தீர்மானமாகியது கண்டு கலங்கி, தடு மாறி நிற்கும் சிங்கள அரசு, போர்க் குற்ற விசாரணைக் கான தீர்மானம் ஐ.நா.வில் நிறைவேறும்போது என்ன செய்யப் போகிறார்கள்? ஓடி ஒழிவார்களா அல்லது ஓலமிட்டு ஒப்பாரி வைப்பார்களா?

வெளிநாட்டு தமிழர்களை பயமுறுத்தி விரட்டிவிட்டு, வாழ்வாதாரமற்று வாழத் துடிக் கும் எம் ஈழம்வாழ் உறவுகளை தனிமைப் படுத்தி, அடக்குமுறை மூலம், பயங்கரவாதம் என்ற ஆயதத்தால் அவர்களை அழிக்க சிங்கள அரசு வகுத்த திட்டத்தில் ஒன்றே இந்த அறிக்கையும், பட்டியலுமாகும். இதில், எதுவுமே பலிக்காது என் பதை இந்தக் கொடியவர்கள் அறியும் நாள் வெகு தொலைவில் இல்லை. கலியுக காலம் என்றாலும் அதற் கும் ஓர் எல்லை உண்டல்லவா.

தாம் தமிழர் என்பதை அடியோடு மறந்து, ஆங்கிலத் தில் பேசி, சிங்களத்தில் சிரித்து, சிங்களவரோடு, சிங்கள வராய் வாழ்ந்த கொழும்புத் தமிழர்களுக்கு சிங்கள அரசுகள் கற்பித்த பாடத் தை யாரால் மறக்க முடியும்? தமிழராய் பிறந்த ஒரே காரணத்திற்காக இனக்கலவரம் என்ற போர்வையிலே, சிங்கள காடையரின் உதவி யுடன். காலத்துக்குக் காலம், சிங்கள அரசும், அதன் படைகளும் நடாத்திய இன அழிப்பின் எதிரொலியே இன்று நாம் காணும் ஈழம்வாழ் உறவுகளின் இணையில்லா ஒற்றுமை.

வெளிநாட்டில் செயற்படும் புலம்பெயர் தமிழர்களை யும், அவர்களின் அமைப்புக்களை யும் எதிரியாகப் பார்க்கும் இந்த அரசும் எமக்குள் ஓர் புரிந்துணர்வை ஒற்றுமையை கொண்டு வருவது நிச்சயம். புலத்தில் வாழும் இலட்சிய வாதிகளும், தன்மானத் தமிழர்களும் இணைந்து செயற்படுவதை யாரால் தடுக்க முடியும்? நன்றி.

கலாநிதி இராம் சிவலிங்கம்

**sivalingham@sympatico.ca**

# புரட்சிக்கவி

9

பாரதிதாசனார்



புரட்சிக்கவிஞர்

அக்கால உலகிருட்டைத் தலைகீ ழாக்கி
அழகியதாய் வசதியதாய்ச் செய்தார் தந்தார்?
இக்கால நால்வருணம் அன்றி ருந்தால்
இருட்டுக்கு முன்னேற்றம் ஆவ தன்றிப்
புக்கபயன் உண்டாமோ? பொழுது தோறும்
புனலுக்கும் அனலுக்கும் சேற்றி னுக்கும்
சுக்கும்விஷப் பாம்பினுக்கும் பிலத்தி னுக்கும்
கடும்பசிக்கும் இடையறா நோய்களுக்கும்,

பலியாகிக் கால்கைகள் உடல்கள் சிந்தும்
பச்சைரத்தம் பரிமாறி இந்த நாட்டைச்
சலியாத வருவாயும் உடையதாகத்
தந்ததெவர்? அவரெல்லாம் இந்த நேரம்
எலியாக முயலாக இருக்கின் றார்கள்!
ஏமாந்த காலத்தில் ஏற்றங் கொண்டோன்
புலிவேஷம் போடுகின்றான்! பொதுமக் கட்குப்
புல்லளவு மதிப்பேனும் தருகின் றானா?

அரசனுக்கும் எனக்குமொரு வழக்குண் டாக
அவ்வழக்கைப் பொதுமக்கள் தீர்ப்பதேதான்
சரியென்றேன்: ஒப்பவில்லை! இவளும் நானும்
சாவதென்றே தீர்ப்பளித்தான்: சாவ வந்தோம்!
ஒருமனிதன் தேவைக்கே இந்தச் தேசம்
உண்டென்றால், அத்தேசம் ஒழிதல் நன்றாம்!

இருவர்இதோ சாகின்றோம்! நாளை நீங்கள்
இருப்பதுமெய் என்றெண்ணி யிருக்கின் றீர்கள்!

தன்மகளுக் கெனை அழைத்துக் கவிதை சொல்லித்
தரச்சொன்னான், அவ்வாறு தருங்கா லிந்தப்
பொன்மகளும் எனைக்காதல் எந்தி ரத்தால்
புலன்மாற்றிப் போட்டுவிட்டாள்: ஒப்பி விட்டேன்!
என்உயிருக் கழிவில்லை! அந்தோ ! என்றன்
எழுதாத சித்தரம்போல் இருக்கு மிந்த
மன்னுடல்வெட் டப்படுமோர் மாப ழிக்கு
மனநடுக்கங் கொள்ளுகின்றேன்! இன்னும் கேளீர்:

தமிழறிந்ததால்வேந்தன் எனை அழைத்தான்:
தமிழ்க்கவியென் றெனை அவளும் காத லித்தாள்!
அமுதென்று சொல்லுமிந்தத் தமிழ்,என் னாவி
அழிவதற்குக் காரணமா யிருந்த தென்று
சமுதாயம் நினைத்திடுமோ? ஐய கோ! என்
தாய்மொழிக்குப் பழிவந்தால் சகிப்ப துண்டோ?
உமைஒன்று வேண்டுகின்றேன். மாசில் லாத
உயர்தமிழை உயிர்என்று போற்று மின்கள்!

அரசனுக்குப் பின்னிந்தத் துாய நாட்டை
ஆளுதற்குப் பிறந்தஒரு பெண்ணைக் கொல்ல
அரசனுக்கோ அதிகாரம் உங்க ளுக்கோ?
அவ்வரசன் சட்டத்தை அவம தித்தான்!
சிரம்அறுத்தல் வேந்தனுக்குப் பொழுது போக்கும்
சிறியகதை: நமக்கெல்லாம் உயிரின் வாதை!
அரசன்மகள் தன்நாளில் குடிகட் கெல்லாம்
ஆளுரிமை பொதுவாக்க நினைத்திருந்தாள்!

'ஐயகோ' சாகின்றாள்! அவளைக் காப்பீர்!
அழகியஎன் திருநாடே! அன்பு நாடே!
வையகத்தில் உன்பெருமை தன்னை, நல்ல
மணிநதியை, உயர்குன்றை, தேனை அள்ளிப்
பெய்யுநறுஞ் சோலையினை, தமிழாற் பாடும்
பேராவல் தீர்ந்ததில்லை! அப்பே ராவல்
மெய்யிதயம் அறுபடவும், அவ்வி ரத்த
வெள்ளந்தான் வெளிப்படவும் தீரு மன்றோ?

வாழியஎன் நன்னாடு பொன்னா டாக!
வாழியநற் பெருமக்கள் உரிமை வாய்ந்தே
வீழியபோய் மண்ணிடையே விண்வீழ் கொள்ளி
வீழ்வதுபோல் தனித்தாளும் கொடிய ஆட்சி!
எழையினேன் கடைசிமுறை வணக்கம் செய்தேன்!
என்பெரியீர், அன்னையீர் ஏகு கின்றேன்!
ஆழ்கஎன்றன் குருதியெலாம் அன்பு நாட்டில்
அழ்க என்றான்! தலைகுனிந்தான் கத்தி யின்கீழ்!

படிகத்தைப் பாலாபி ஷேகம் செய்து
பார்ப்பதுபோல் அமுதவல்லி கண்ணீர் வெள்ளம்
அடிசேர்தல் கண்டார்கள் அங்கி ருந்தோர்!
ஆவென்று கதறினாள்! அன்பு செய்தோர்
படிமீது வாழாரோ? என்று சொல்லிப்
பதைபதைத்தாள்! இதுகேட்ட தேச மக்கள்
கொடிதென்றார்! கொடுவாளைப் பறித்தார்: அந்தக்
கொலையாளர் உயிர்தப்ப ஓட லானார்!

கவிஞனுக்கும் காதலிக்கும் மீட்சி தந்தார்!
காவலன்பால் துாதொன்று போகச் சொன்னார்:
புவியாட்சி தனிஉனக்குத் தாரோம் என்று
போயுரைப்பாய் என்றார்கள்! போகா முன்பே,
செவியினிலே ஏறிற்றுப் போனான் வேந்தன்!
செல்வமெல்லாம் உரிமையெலாம் நாட்டா ருக்கே
நவையின்றி யெய்துதற்குச் சட்டம் செய்தார்!
நலிவில்லை! நலமெல்லாம் வாய்ந்த தங்கே!



# கண்ணீர்ப்பெருக்கு..

சிறுகதை



**கோ**வில் குளக்கரையிலே நிற்கும் வேப்ப மரத்தின் குளிர்ந்தகாற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறான் நீலன்.

நீலனின் பார்வை எல்லாம் நீர் நிறைந்த குளத்திலேயே நிலை குத்திக் கிடக்கிறது. திடீரென்று மனம் ஏதோ சொல்வது போல் நினைத்து பார்வையை பாதைக்குத் திருப்பு கிறான். கண்ணுக்கு புலப்படுகிற தூரத்தில் அவன் அன்பு மகன் வதனன் வந்து கொண்டிருக் கிறான். நீலனின் மனமோ வெதும்புகிறது, அன்பு மகன் வருகிறான் அக மகிழவேண்டிய நீலன் அழுகின்ற நிலைக்கு வருகின்றான்.

கண்களில் கண்ணீர் புறப்பட்டும் விட்டது மகன் அருகிலும் வந்துவிட்டான். தனது கண்ணீர் தெரியக்கூடாது என்பதற்காக, மேல் துண்டால் துடைத்துக் கொண்டு என்னடா அப்பு! என்னையத்தேடி இவ்வளவு தூரம் வந்துட்டே என்று கேட்க வதனனோ "அப்பா நம்ம பஞ்ச னூர் அம்மான் (மாமா) வந்துருக்காக அவங் களுக்கு காபி போட அம்மா பால் வாங்கிட்டு வரச் சொன்னாங்க" என்றதும் புள்ளைய வேலை வாங்கக் கூடாதுன்னு அவளுக்கு எத்தனை தடவை சொன் னாலும் புரியமாட்டேங்குது என்று மனதிற்குள் புலம்பி யபடியே "செம்ப எங்கிட்ட கொடு, அப்பா பால் வாங்கிட்டு வரேன், நீ வீட்டுக்குப் போ! பாத்துப்பா விழுந்துடாம போப்பா பத்திரம்" என்று கூறி தனது உயிரான மைந்தனை அனுப்பி விட்டு பால்வாங்க செம்புடன் பாதையில் நடக்கிறான்.

எண்ணம் பழையதை நினைக்கிறது நீதான் குற்றவாளி, கொடூரன் என அவனது மனச்சாட்சி அவனை குற்றவாளிக் கூண்டில் ஏற்றுகிறது: ஆம் என்று அவன் உதடுகளும் ஒத்துக் கொள்கின்றன. அன்று மட்டும் அது நடவாதிருந்தால் இன்று தன் மகனைப் பார்த்து பரிதவிக்க வேண்டிய நிலை வந்திருக் காது என்பதை உணர்கிறான் மறுபடி கண்ணீர் கண்களிட மிருந்து விடுதலை பெற்று பார்வைக்குப்பகைவனாகிறது, பாதையை யும் மறைக்கிறது சிறிது நேரம் நின்று அழுகையை முழுதாய் முடித்துவிட்டு நகர் கிறான் மறுபடியும் அன்றைய நாள் நினைவுக்கு வருகின்றது.

மனைவிக்கும் அவனுக்கும் சிறு மனத் தாங்கல், திருமணமாகி மறு வீடு வந்து விட்டுச் சென்ற தன் தங்கைக்கு, வீட்டிலிருந்த பரம்பரை நகையை எடுத்துக் கொடுத்து விட்ட தால் மனைவி அவனை திட்டிக் கொண்டே இருக்க, சினம் தலைக்கேறி அருகில் இருந்த மருந்திடிக் கும சிறுகுழவிக் கல்லை எடுத்து வீச அந்நேரத்தில் அருமை மகன் வதனன் ஓடிவர அவனது கால்களின் அந்தக் குழவிக் கல்பட்டு எலும்பு முறிந்துவிட்டது.

மகன் மயங்கி விட்டான். 5 மைல்களுக்கு அப்பால்தான் மருத்துவமனை. மருத்துவமனை சென்றார்கள் மருத்துவர் இல்லை. மருத்துவரின் உதவியாளர் மருத்துவம் செய்தார், மறுநாள் மருத்துவரும் வந்தார், சிகிச்சையும் செய்தார் எனினும் வதனனால் வாய்திறந்து மகிழ்ச்சியாக பேச இயல வில்லை.

அப்பா, அம்மா என்று மட்டும் தான் சொல்ல முடிந்தது அவனால். வலி சிறுபிள்ளையால் பொறுக்க இயலவில்லை. பூமியில் கால்பதித்து நடக்க, கால் ஆண்டு காலம் ஆகிவிட்டது, என்றாலும் ஒரு பக்கம் தாங்கித்தாங்கித்தான் நடக்க முடிந்தது.

தனது மகன் தாங்கித்தாங்கி நடக்கும் போதெல்லாம் நானே குற்றவாளி என்று கூறி நீலனின் மனமே அவனுக்கு தண்டனை தந்து கொண்டிந்தது, அந்தத் தண்டனைதான் வதனனைக் காணும் போது புறப்படும் கண்ணீர்ப் பெருக்கு.

**- இருங்கோவேள்**



# மதுவை ஒழிப்போம்

## சிறுகதை

“திருமலை, உங்க அப்பா என்னடா பண்றாரு?“ “அவனப்பத்தி கேக்காதடா“ என்று சொல்லிவிட்ட திருமலை ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்டு. அதெல்லாம் பேசாதடா, சரி. நாளைக்கு வர்றேன், பார்க்கலாம் என்று கிளம்பிவிட்டான். திருமலையின் நண்பனான உரைஅழகனுக்கு பேரதிர்ச்சியாகப் போய் விட்டது. திருமலை நல்ல நண்பன். இவன் ஏன் தனது தந்தையை இப்படிப் பேசுகிறான்? என்று வெகுவாகக் குழம்பித்தான் போனான். இருவரும் பள்ளிப்படிப்பை முடித்துவிட்டு ஒரு மாலை நேரக் கல்லூரியில் முதலாமாண்டு சேர்ந்திருந் தனர். இருவருக்கும் நட்பு என்பது இரண்டு மாதங்களாகத்தான். தங்களைப் பற்றிப் பேசிக் கொண்டார்களே தவிர, வீட்டு உறுப்பினர்கள் பற்றியெல்லாம் இதுவரை அவர்கள் பேசிக் கொண்டதில்லை. இன்று தான் உரையழகன் திரு மலையின் தந்தையைப் பற்றிக் கேட்டான். அதற் குள் இப்படி ஒரு பதில் வந்து விட்டது.

உரைஅழகன் ஒரு முடிவுக்கு வந்தான். திரு மலையின் குடும்பத்தைப் பற்றி இனி அவனிடம் பேசக்கூடாது என்பதுதான் அந்த முடிவு. ஆனால் நண் பனிடம் தனது தந்தையை அவன் என்று சொல்லி விட்டோமே என்ற வேத னையில் தனது வீடு நோக் கிப் போக வேண்டிய திருமலையின் கால்கள் சிறுவர் பூங்காவை நோக் கிச் சென்றது.

சிறுவர் பூங்காவில் சிறுவர்கள்கள் விளை யாடிக்கொண்டிருந்தனர். சிலர் அப்பாவுடன், சிலர் அம்மாவுடன், சிலர் அப்பா அம்மா இரண்டு பேர் களுடனும் விளையாடிக் கொண்டிருந் தனர். இதைப் பார்த்த திருமலையின் இருவிழி களும் கண்ணிரைச் சுரந்தன.

அவனுக்கு விபரம் தெரிந்த நாள் முதலாய் அவனது பெற்றோர் அவனோடு விளையாடியது இல்லை. காரணம் இருக்கத்தான் செய்தது. எத்தனை காரணம் இருந்தாலும் இது ஏற்கக் கூடியதாக இல்லைதான் என்றாலும் அவனது வாழ்க்கையிலும் அவனது அக்கா வாழ்க்கையி லும் அப்படித்தான். அப்பாவின் தவறால் அவனுடைய அம்மாவும் அவர்களும் மகிழ்ச்சி யாக இருக்கவில்லை. கொஞ்சியது இல்லை. விளையாடியது இல்லை. காரணம் அந்தக் குடும்பத்திற்குத் தெரியும். ஏன் அந்த சிற்றூருக்கே தெரியும். திருமலையின் தந்தை குடிகாரர்

என்பதுதான் அது. வேலை செய்வார். கூலி வாங்கி அந்தப் பணம் முழுவதற்கும் மதுவை வாங்கி குடித்து காலி செய்துவிடுவார். இதுதான் அவன் இதுவரை அவனது அப்பாவைப் பார்த்து வந்தது. குடிப்பது மட்டுமல்லாது வீட்டில் தகராறும் செய்வார். திருமலையின் தாய், வீட்டு வேலைகள் செய்து, தனது பிள்ளைகளை வளர்த்து வந்தாள். திருமலை பத்தாம் வகுப்பு முடித்தவுடன் மாலை நேரங்களில் வேலைக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டான்.

மகன்தான் சம்பாதிக்கிறானே என்று திருமலையின் தாய் அமைதியாக வீட்டில் இருந்து விடவில்லை. இன்னும் ஒரு வீட்டிலும் சேர்த்து வேலை செய்து வந்தாள். காரணம் தனது மகளை ஒரு நல்ல இடத்திற்கு அனுப்பவேண்டும் என்ற நல்லெண்ணம்தான்.

திருமலை மிகவும் சிரமப்பட்டான். சில தினங்களில் இரவிலும் வேலை செய்தான். பணம் சேர்த்தார்கள். அந்தப் பணத்தைக் கொண்டு மிகவும் எளிமையாக திருமலையின் அக்காள் திருமணம் நடந்தேறியது. திருமண நாளில்கூட திருமலையின் அப்பா, தனது உறவினர் ஒரு வரிடம், “என் மகள் கல்யாணத்துக்கு மொய் எவ் வளவு செய்யப்போறே?“ என்று கேட்டு, அந்த மொய்ப்பணத்தை வாங்கி மது அருந்திவிட்டு கத்திக் கொண்டிருந்தது இன்னும் திருமலை மனதைவிட்டு அகலவில்லை.

ஒருநிலையில் இல்லாது, மதுநிலையில்தான், தன் மகள் கரத் தைப் பிடித்து மணமகன் கரத்தில் கொடுத்தார் திருமலையின் தந்தை. இந்த நிகழ்வுகளெல்லாம் சேர்ந்துதான் உரை அழகனிடம் அப்படிச் சொல்ல வைத்துவிட்டது திருமலையை.

தனது தந்தையை வெறுத்தான் திருமலை. அவரை மட்டுமல்ல, வழியில் டாஸ்மாக்கில் நிற்கும் அனைவரையுமே வெறுத்தான். அவர் களை எல்லாம் எதிரிகளாகவே பார்த்தான். மதுக் கடைகளில் வெடிகுண்டை வீசி விடலாமா என்று அவன் பல முறை எண்ணியதுண்டு. என்ன செய்வது? மதுவை அரசாங்கமே நடத்து கிறதே, பிறகு அரசாங்கத்துக்கு எதிரானவன் என்று சொல்லி தன்னை மிகப்பெரிய தண்ட னைக்கு உட்படுத்தி விடுவார்களே என்று தயங்கி னான்.

ஆனால் அவன் மனம் மதுவை எப்படி ஒழிப்பது என்றே சதாகாலமும் எண்ணமிட்டுக் கொண்டிருந்தது. மதுவைப்பற்றியோ, மதுவிற்கு அடிமையாகிப்போன தனது தந்தையைப் பற்றியோ யாராவது கேட்டுவிட்டால் அவனது உச்சந்தலையில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போல உணர்வான். அவனால் அதைத் தாங்கிக் கொள்ள இயலாது. உடனே அந்தப் பேச்சை மாற்ற வேண்டும், அல்லது அந்த இடத்தில் இருந்து அவன் வெளியேறிவிட வேண்டும். அப் படித்தான் இதுவரை நடந்து வந்திருக்கி றான்.

இப்போதும் தனது நண்பனான உரை அழகன் தன் தந்தையைப் பற்றிக் கேட்டபோது அவனை விட்டுவிட்டு வந்து விட்டான். இது சரியா தவறா என்று அவன் மனம் பட்டிமன்றம் நடத்தியது. தனது வயது நண்பனோடுகூட இது பற்றிப் பேச தன்னால் இயலவில்லையே என்று வருந்தினான். நாளை நண்பனிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான்.

மறுநாள் மாலை நண்பனைத் தேடிச்சென்று சந்தித்தான் திருமலை. தனது நேற்றைய செயலுக்கு வருத்தம் தெரிவித்துக் கொண்ட தோடு, தனது தந்தை மதுவின் அடிமையாய் தினம் தினம் சாவதைச் சொன்னான். உரை அழகன் அவனுக்கு அறுதல் சொன்னான். அதோடு நிற்காமல், நாம் இருவரும் மாணவர் களை ஒன்று திரட்டி மதுவை ஒழிப்பதற்கான வேலைகளைச் செய்வோம் என்றான்.

திருமலைக்கு ஒரு புதுவழி கிடைத்தது போல் தோன்றியது. தனது தந்தை மட்டுமல்லாது இந்த மதுவினால் சிறைப்பட்டுக் கிடக்கும் பலகோடிப் பேர்களுக்கு விடுதலை அளித்திட வேண்டும் என்றான். இருவரும் மதுவை ஒழிப்போம் என்று உறுதி எடுத்துக் கொண்ட கையோடு தங்களது நண்பர்களை ஒன்று சேர்க்க ஆரம்பித்து விட்டனர். மாணவ சமுதாயம் ஒன்று சேர்ந்தால் தடைகள் தகர்த்து எறிப்பபடும் என்ற உண் மையை, நம்பிக்கையை நெஞ்சில் ஏந்தி செயல் படத் தொடங்கினர்.

**வேல்.பொன்முடி**

◆

# சுக்கின் சிறப்பு

வீட்டில் உள்ள ஓர் எளிய மருந்துப் பொருள், சுக்கு, அறுவடை செய்த இஞ்சியை ஒரு நாள் முழுதும் நீரில் ஊற வைத்து, மூங்கில் குச்சிகளைக் கொண்டு இஞ்சியின் மேல் உள்ள தோலை நீக்கி, பின்னர் ஒரு வாரம் சூரிய ஒளியில் நன்கு காயவைத்துப் பெறப்படுவதுதான் சுக்கு.

**சுக்கின் மருத்துவப் பயன்கள் வருமாறு....**

சுக்குடன் சிறிது பால் சேர்த்து மையாக அரைத்து, நன்கு, சூடாக்கி, இளஞ்சூடான பதத்துக்கு ஆறியதும், வலியுள்ள கை, மூட்டுகளில் பூசிவந்தால் மூட்டுவலி முற்றிலும் குணமாகும்.

சுக்கைத் தூள் செய்து, எலுமிச்சைச் சாறுடன் கலந்து குடித்தால் பித்தம் விலகும்.

சுக்கு, மிளகு, தனியா, திப்பிலி, சித்தரத்தை இந்த ஐந்தையும் இட்டு கஷாயம் போட்டு பருகி வர, கடுஞ்சளி மூன்றே நாட்களில் குணமாகும்.

சிறிது சுக்குடன் ஒரு வெற்றிலையை மென்று தின்றால், வாயுத் தொல்லை நீங்கும்.

சுக்கு, வேப்பம்பட்டை போட்டு கஷாயம் செய்து குடித்துவந்தால், ஆரம்பநிலை வாதம் குணமாகும்.

சுக்குடன் சிறிது நீர் தெளித்து விழுதாக அரைத்து, நெற்றியில் தடவினால் தலைவலி அப்படியே நீங்கிவிடும்.

சுக்கு, கருப்பட்டி, மிளகு சேர்த்து, சுக்கு நீர் காய்ச்சிக் குடித்து வந்தால் உடல் அசதி, சோர்வு நீங்கி சுறுசுறுப்பு ஏற்படும்.

சுக்கோடு சிறிது வெந்தயம் சேர்த்துப் பொடியாக்கி, தேனில் கலந்து சாப்பிட்டால் அலர்ஜி தொல்லை அகலும்.

சுக்கு, மிளகு, சீரகம், பூண்டு சேர்த்து கஷாயம் செய்து காலை, மாலை குடித்து வர, மந்தம் குணமாகும்.

சுக்குடன், சிறிது துளசி இலையை மென்று தின்றால், தொடர் வாந்தி, குமட்டல் நிற்கும்.


சுக்குடன், மிளகு, சுண்ணாம்பு சேர்த்து நன்கு அரைத்துப் பூசி வந்தால், தொண்டைக் கட்டு மாறும், குரல் இயல்பு நிலைபெறும்.

சிறிது சுக்குடன், சின்ன வெங்காயத்தை வைத்து அரைத்துச் சாப்பிட்டால் மலக்குடலில் உள்ள தீமை தரும் கிருமிகள் அழியும்.

சுக்குடன், கொத்தமல்லி இட்டு கஷாயம் போட்டு பருகினால் மூல நோய் தீரும்.



## காவல்துறை மக்களின் நண்பன்



விபத்து ஒன்று நடந்து, ஒரு பெண் பலத்த காயமடைந்த நிலையில் அந்த இடத்திற்கு வந்த அதிகாரிகள், இருங்கள் ஆம்புலன்ஸ் வரட்டும் என்று சொல்லிக் கொண்டிருந்தனர். அந்த வழியாக வந்த காவல்துறை உயர் அதிகாரி திரு. சைலேந்திரபாபு அவர்கள் உடனே இறங்கி, உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கிறார், பார்த்துக் கொண்டிருக் கிறீர்களே என்று அவர்களை விலக்கி விட்டு, அப்பெண்ணை தூக்கி தனது வாகனத்தில் ஏற்றிச் சென்று மருத்தவமனையில் சிகிச் சைக்கு உதவியிருக்கிறார்.

இதுபோன்ற செயல்களை தொடர்ந்து செய்து வருபவர் திரு சைலேந்திர பாபு அவர்கள். சென்னை கூவத்தின் சகதியில் சிக்கிக் கொண்ட ஒருவரை, கூவத்தில் இறங்கிக் காப்பாற்றினார், சென்னையில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு கோட்டூர்புரத்தில் முதல் மாடி வரை நீர் நின்றிருந்தபோது நீந்திச் சென்று தத்தளித்தவர்களை காப்பாற்றியது போன்ற பல நற்காரியங்களை தொடர்ந்து வருகிறார் திரு. சைலேந்திரபாபு அவர்கள். இவரைப் போன்றவர்கள்தான் காவல்துறை மக்களின் நண்பன் என்ற முழக்கத்தை நினைவுபடுத்தி வருகின்றனர்.

---

## நைஜீரிய மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற ‘நாத்திக’ இளைஞர் வெளியேற்றம்

கடவுள் நம்பிக்கை இல்லை என்று கூறியவந்ததால் மனநலம் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகித்து, மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட இளைஞர் டாக்டர்கள் வேலை நிறுத்தம் காரணமாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளார். நைஜீரியாவின், முபாரக் பாலா என்ற இளைஞர் ஒரு பொறியியல் பட்டதாரி.

அவர் கடவுள் நம்பிக்கை இல்லை என்று கூறிய காரணத்தால் கனோ மருத்துவமனையின் மனநல பிரிவில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார். கிட்டதட்ட 18 நாட்களாக அவருக்கு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில் அம்மருத்துவ மனையின் மருத்துவர்கள் திடீர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனால் அங்கிருந்து பல்வேறு நோயாளிகள் வெளியேற்றப்பட்டனர். அந்நோயாளிகளுடன் சேர்ந்து பாலாவும் வெளியில் அனுப்பப்பட்டார். அவருடைய பாதுகாப்பு கருதி பாதுகாப்பான இடத்திற்கு சென்றவுடன் இத்தகவல்களை வெளியிடுவதாக சர்வதேச மனித நேய மையம் ஒன்று தெரிவித்துள்ளது. கடவுள் இல்லை என்று கூறிய பாலா விருப்பமின்றி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு அங்கு தொடர்ந்து சிகிச்சையும் அளிக்கப்பட்டு வந்தது.

இவர் மற்றவர்களிடம் உதவி கேட்டு தொடர்பு கொண்டதால் அவரது செல்போன் பறிமுதல் செய்யப்பட்டது. இருப்பினும் மின்னஞ்சல், சமூக ஊடகங்கள் வழியாக அவர் வெளியுலக உதவியை நாடினார். தற்போது அவர் வெளியேற்றப்பட்டுள்ள போதிலும் சமய குற்றச்சாட்டுகள் அந்நாட்டில் ஆபத்தான விளைவுகளை ஏற்படுத்தக்கூடும் என்று மனிதநேய மையம் தெரிவித்துள்ளது.

தனக்கு உதவி புரிந்த அனைவருக்கும் தன்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதாக பாலா தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தித் திணிப்பை எதிர்த்தும், தமிழைக் கட்டாயப் பாடமாக்கவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் போராட்டம்!

சென்னை வள்ளுவர் கோட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் மொழியுரிமைப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. இப் போராட்டத்தில் பல்வேறு தமிழ் அமைப்புகள் மற்றும் தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டு தமிழக அரசுக்கும், இந்திய அரசுக்கும் கோரிக்கை வைத்து முழக்கமிட்டனர். தாங்கள் முன்வைத் துள்ள கோரிக்கைகள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு:

**தமிழ்ப்பாடம் தமிழ்க்கல்வி**

தமிழகம், முன் எப்போதும் இல்லாதவாறு பல பிரச்சனைகளைச் சந்தித்து வருகிறது. அதில் மிக மிக முக்கியமான பிரச்சனை மொழிப்பிரச்ச னையாகும். தமிழகத்தில் உள்ள மாணவர்கள் அனைவரும் தமிழ் மொழியை கட்டாயம் படிக்க வேண்டும் என்று தமிழக அரசு ஒரு ஆணை யைப் பிறப்பித்து அதை நடைமுறைப் படுத்த தனியார் பள்ளிகளுக்கு அறிவுறுத்தியது. ஆனால் அதை தனியார் பள்ளிகள் காதுகளில் போட்டுக் கொள்ளவே இல்லை. பெற்றோர்களும் இது பற்றி விழிப்புணர்வு கொடுக்கவில்லை. இந்நிலை யில் அடுத்த கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் தமிழ் மொழியில் கட்டாயம் தேர்ச்சி பெற வேண்டும் என பள்ளி இயக்ககம் அண்மையில் செய்தி வெளியிட்டது.

இதை எதிர்த்து தனியார் பள்ளிகள் நீதி மன்றம் சென்று தமிழைக் கட்டாயப் பாடமாக அறிவிக்கக்கூடாது என்று வழக்குத் தொடுத்துள் ளனர். கர்நாடகா, ஆந்திரா மற்றும் பிற மாநிலங்களில் அந்தந்த மாநில மொழிகள்



கட்டாயப் பாடமாக இருக்க, தமிழ்நாட்டில் மட்டுமே தமிழே படிக்காமல் ஒருவர் கல்லூரிப் படிப்பு முடித்து விடும் சூழ்நிலை உருவாகி உள்ளது.

இந்த நிலை நீடித்தால், நாளை தமிழ் எழுதப் படிக்கத் தெரியாத ஒரு சமூகம் தமிழகத்தில் உருவாகும். இதனால் தமிழ்மொழிப் பயன் பாட்டில் இருந்து முற்றிலும் அழியும் நிலை ஏற்படும். இதைத் தடுக்கும் பொறுப்பு தமிழக அரசுக்கு உண்டு.

**தமிழக அரசுக்கு தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு வைக்கும் கோரிக்கைகள்:**

க. தொடக்கக் கல்வி முதல் உயர்நிலைப் படிப்பு வரை தமிழ் மொழியை ஒரு கட்டாயப் பாடமாக பள்ளிகளில் இருக்க அரசு ஆவன செய்தல் வேண்டும். அனைத்து அரசு தனியார், நடுவண் அரசு, சர்வதேசப் பள்ளிகளிலும் தமிழ் மொழிப் பாடம் கட்டாயமாக கற்றுத் தரப்பட வேண்டும். இதை தமிழக அரசு உறுதி செய்தல் வேண்டும்.

உ. அனைத்து தமிழக அரசுப் பள்ளிகளிலும் தமிழ் வழிக் கல்வியே கற்றுத் தரப்பட வேண்டும். ஆங்கில வழிக் கல்வியை அரசு தமிழ் மக்களிம் திணிக்கக் கூடாது.

ங. அரசுப் பள்ளிகளை நாடாத நடுத்தர மற்றும் மேல் நடுத்தர மக்கள் விரும்பும் வகையில் தரமான தமிழ் வழிக் கல்வியை தனியார் பள்ளிகள் வழங்க வேண்டும். தனியார் பள்ளிகள் ஒரு வகுப்பிலும், ஒரு பிரிவு தமிழ் வழிக் கல்வியை வழங்க தமிழக அரசு உத்தரவிட வேண்டும். இதன் மூலம் தமிழக மக்கள் அவர்களின் தாய் மொழியில் கல்வி கற்கும் உரிமையைப் பெறுவார்கள். தாய் மொழிக் கல்வி உரிமையை ஒவ்வொரு தமிழ் மாணவனும் பெறுதல் வேண்டும் என்பதே நம் கோரிக்கை.

ச. தமிழ்ப் பாடத்தைக் கற்றுத் தராத தனியார் பள்ளிகளின் உரிமத்தை தமிழக அரசு இரத்து செய்ய வேண்டும். நடுவண் அரசுப் பள்ளிகளுக் கும் தமிழக அரசு தமிழ்ப்பாடத்தைக் கற்றுத் தர உத்தரவிட வேண்டும்.

ஞ. தமிழக அரசின் கீழ் இயங்கும் அனைத்துத் துறைகளிலும் தமிழே ஆட்சி மொழி என்பதை அரசு உறுதி செய்தல் வேண்டும். குறிப்பாக காவல்துறை முழுவதும் தமிழ்ப்படுத்தப்பட வேண்டும்.

ட. தமிழக அரசு ஊழியர்கள் தங்கள் பிள்ளைகளை அரசுப் பள்ளிகளில் படிக்க அரசு ஆணையிட வேண்டும். இதனால் பள்ளிகளின் தரம் விரைவில் முன்னேறும்.

**இந்தித் திணிப்பு:**

புதிதாகப் பொறுப்பேற்றுள்ள பாஜக அரசு, காங்கிரசு அரசை விட பன்மடங்கு வேகத்தில் இந்தித்திணிப்பை நடைமுறைப்படுத்தி வருகிறது. நடுவண் அரசின் தொடர்பு மொழியாக இந்தியைக் கட்டாயப்படுத்துகிறது. இந்தி அல்லாத பிற மாநிலங்களும் இந்தியில்தான் அரசுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என அறிவுறுத்துகிறது. சமூக வலைத் தளங்களில் இந்தியில் தான் அரசு அதிகாரிகள் தகவல்களை பதிவிட வேண்டும் என் வலியுறுத்தியது. பின்பு அதற்கு எதிர்ப்பு கிளம்பியவுடன் அந்த ஆணையைத் திரும்பப் பெற்றது.

எனினும் நடுவண் அரசின் கீழ் இயங்கும் அனைத்து நிறுவனங்களும் இந்தியில்தான் கோப்புகளை வைக்க வேண்டும் என ஆணையிட்டு உள்ளது. இது முற்றிலும் ஜனநாயகத்தை மீறும் செயலாகும். பல தேசிய இனங்கள் நடுவண் அரசின் கீழ் இயங்கும் நிறுவனங்களில் பணியாற்றுகின்றனர். இவர்கள் அனைவரும் இப்போது இந்தி கற்றுத் தேர வேண்டும் என்று நடுவண் அரசு கட்டாயப் படுத்தகிறது. இது இனங்களின் மொழி உரிமையை மீறும் செயலாகும். ஏற்கனவே இந்திய அரசு அனைத்துத் துறைகளிலும் இந்தியைக் கட்டாயமாகத் திணித்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அனைத்து தேசிய இனங்களும் தங்கள் மொழியுரிமையை நிலைநாட்ட இந்திய அரசிடம் நாங்கள் வைக்கும் கோரிக்கை.

க. தமிழ் உட்பட அனைத்து மாநில மொழிகளும் இந்திக்கு நிகராக ஆட்சி மொழியாகும் தகுதியை இந்திய அரசு வழங்க வேண்டும். அதுவரை இந்தி இந்தியாவின் அலுவல் மொழி என்ற தகுதியை உடனே நீக்குதல் வேண்டும். இந்தியாவின் தொடர்பு மொழியாக ஆங்கிலமே நீடிக்க வேண்டும்.

உ. மாநிலங்களில் செயல்படும் அனைத்து நடுவண் அரசு நிறுவனங்களில் அந்தந்த மாநில மொழியே அலுவல் மொழியாக இரக்க வேண்டும். இந்தி அல்லாத மாநிலங்களில் இந்திமொழியை அரசு எந்த வகையிலும் ஊக்குவிக்கக் கூடாது, திணிக்கக்கூடாது.

ங. மக்களிடம் தொடர்பில் உள்ள வங்கிகள், தொடர்வண்டி நிலையம், வானூர்தி நிலையம், அஞ்சல் நிலையம் போன்ற நிறுவனங்களில் மாநில மொழியை மட்டுமே பயன்படுத்த வேண்டும். இந்தி மொழியைப் பயன்படுத்தக் கூடாது.

ச. அஞ்சல்தலை, கடவுச்சீட்டு, நாணயங்களில் இந்தி மொழியை மட்டுமே பயன்படுத்துகிறது இந்திய அரசு. அரசு இதை உடனே நிறுத்த வேண்டும். தமிழ் மொழி உட்பட 8வது அட்டவ ணையில் குறிப்பிட்ட அனைத்து மொழிகளுக் கும் நாணயங்களில் கடவுச் சீட்டில், அஞ்சல் தலைகளில் இடமளிக்க வேண்டும். சுழற்சி முறை யிலோ அல்லது விகிதாச்சார அடிப்படை யிலோ மாநில மொழிகளை அஞ்சல் தலையிலும் நாணயங்களிலும் அச்சிடலாம் கடவுச் சீட்டில் மாநில மொழியைக் கட்டாயம் பயன்படுத்த வேண்டும்.

ஞ. தமிழகத்தில் இந்திய ஆட்சிமொழிச் சட்டம் செல்லுபடி ஆகாது. அதனால் தமிழகத்தில் உடனடியாக நடுவண் அரசு நிறுவனங்களில் உள்ள இந்தித் திணிப்பை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். எ.கா: தொடர்வண்டி நிலையங்கள், வானூர்தி நிலையங்களில் தமிழும் ஆங்கிலமும் மட்டுமே இருக்க வேண்டும். இந்தி இருக்கக்கூடாது. (இரு மொழிக் கொள்கை)

ட. இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களிலும் இந்தி மாநிலங்களில் உள்ளது போலவே இரு மொழிக் கொள்கையைக் கடைபிடிக்க வேண்டும். இந்தி மாநிலங்களுக்கு ஒரு நீதி, மற்ற மாநிலங்களுக்கு ஒரு நீதி என்பதாக இருக்கக்கூடாது. மாநில மொழி மற்றும் ஆங்கிலம் மட்டுமே இருத்தல் வேண்டும். இதன் மூலம் இந்திக்கு தேவையில்லாமல் கொடுக்கப் படும் சிறப்புத் தகுதி நீக்கப்படும். சமநீதி நிலைநாட்டப்படும்.

எ. அனைத்துத் துறைகளிலும் மொழி சம உரிமை பாதுகாக்கப்பட வேண்டும். பாராளு மன்றம், நீதிமன்றம், ராணுவம், வருமானவரிதுறை என எங்கும் இந்தியைத் திணிக்கக்கூடாது. மாநில மொழிகளுக்கு முழு உரிமை அளிக்கப் பட வேண்டும். இதன் மூலம் இந்தியின் கட்டா யப் பயன்பாடு குறைந்துவிடும். மாநில மொழி களின் உரிமைகள் மீட்கப்படும். இதை நடை முறைப்படுத்துவதற்கான செயற்குழுவை நடுவண் அரசு உருவாக்க வேண்டும்.

அ. மொழிச்சமஉரிமைச் சட்டத்தை இந்திய அரசு பாராளுமன்றத்தில் நிறைவேற்றல் வேண்டும்.

இவ்வாறு தமிழக அரசுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை வைத்து அதை நடைமுறைப்படுத்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட் டது.

**இராஜ்குமார் பழனிச்சாமி**

செய்தித் தொடர்பாளர்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

9566224027.

# தேடுகின்றேன்

புழுவில்லாப் பழங்களையே பார்த்து வாங்கிப்
புசித்திடவே நாளுமிங்கே தேடு கின்றேன்
அழுதிடாத குழந்தையினை வீடு தோறும்
அலைந்துநானும் பார்த்திடவே தேடு கின்றேன்
பழிசெய்யாத் தலைவருமே நாட்டில் உண்டா
பலகாலம் விரும்பிநானும் தேடு கின்றேன்
குழியில்லாச் சாலைகளை மழையின் நாளில்
குனிந்துநானும் சென்னையில் தேடு கின்றேன்.

கையூட்டு பெற்றிடாத அலுவ லர்தான்
காலமெல்லாம் இந்நாட்டில் தேடு கின்றேன்
மையூறும் எழுதுகோலால் எழுது கின்ற
மனிதநேயக் கவிஞர்கள் தேடு கின்றேன்
நெய்யூறா இனிப்புகளை உண்ண வேண்டி
நெடுநாளாய் விருந்துகளில் தேடு கின்றேன்
செய்யூரும் போகின்ற பாதை ஓரம்
செழித்திருக்கும் நெல்வயலைத் தேடு கின்றேன்.

பொதுமக்கள் வாழவென்றே கடமை ஆற்றும்
புதுமைமிகு நல்லமைச்சர் தேடு கின்றேன்
கதியற்ற ஏழைகட்கே உதவு கின்ற
கருணையுள்ள மனிதர்களைத் தேடு கின்றேன்
அதிகாலை எழுந்தபின்னால் உழவு செய்ய
அணிவகுக்கும் ஏர்உழவர் தேடு கின்றேன்
புதிதாக வரவிருக்கும் பசியைப் போக்கும்
பொல்லாத மருந்தினையே தேடு கின்றேன்.

குறையாத குணங்களையே கொண்ட நல்லார்
குவலயத்தில் நாளெல்லாம் தேடு கின்றேன்
அறிவியலின் பயனனைத்தும் நன்மை செய்ய
அருமையுடன் முயல்வோரைத் தேடு கின்றேன்
முறையோடு ஆட்சிநடத்தும் கட்சி ஒன்றை
முழுமூச்சாய்ப் பலகாலம் தேடு கின்றேன்
குறைவற்ற செல்வங்கள் எல்லோ ருக்கும்
கொடுக்கின்ற மக்களாட்சி தேடு கின்றேன்.



கவிஞர். இராம. பரஞ்சோதி.


# சுக்கு மிட்டாய் பாட்டி

பள்ளியில் முதல் இரண்டு பாடவேளைகள் எப்போது முடியும்? இடைவேளை மணி எப்போது அடிப்பார்கள்? என்று எல்லா மாணவர்களின் மனமும் கணக்குப் போட்டுக் கொண்டிருக்கும். முதல் பாடவேளையை எல்லோரும் ஒழுங்காக கவனிப்பார்கள். இரண்டாவது பாடவேளை ஆரம்பத்திலேயே அந்த எண்ணம் ஒவ்வொரு மாணவனையும் ஆக்கிரமித்துக் கொள்ளும். அதற்கு காரணம் இருக்கத்தான் செய்தது.

அரசமரத்தடியில் சுக்கு மிட்டாய் விற்கு அந்தப் பாட்டியின் ஞாபகம்தான் அனைவருக்கும். பெயர்தான் சுக்கு மிட்டாய். ஏதோ மருந்துப் பொருள் போன்று எண்ணத் தோன்றும். ஆனால் ஒருமுறை சாப்பிட்டவர் அதன்பிறகு அதை விரும்பாமல் இருக்க முடியாது. சுக்கும் கருப்பட்டியும் நல்லெண் ணையும் சேர்த்து செய்யப்பட்ட, சிறுவர்களும் விரும்பும் மிட்டாய் அது. அந்தப் பாட்டியிடம் வாங்கித் தின்றால் தான் திருப்தி ஏற்படும் எல்லோருக்கும். அந்தப் பாட்டியின் கைப் பக்குவம் அப்படி.

அந்தப் பாட்டியின் உண்மையான பெயர் யாருக்குமே தெரியாது. சுக்குமிட்டாய் பாட்டி என்பதுதான் அவரது பெயரானது. சிறு வயதினர் முதல் பெரியவர்கள் வரை பாட்டியை அப்படித்தான் அழைத்தார்கள்.

எப்போதாவது சுக்கு மிட்டாய் பாட்டி, மிட்டாய் விற்க வராவிட்டால் மற்ற இரண்டு பாடவேளைகளிலும் மாணவர்களுக்கு சிந்தனைத்திறன் குறைந்துவிடும். மதியம் சாப்பாட்டிற்குப் பிறகுதான் சுக்கு மிட்டாய் பாட்டி



அவர்கள் மனதிற்கு தற்காலிகமாக விடை கொடுப்பார். அடுத்த நாள் பள்ளிக்குப் புறப்படும் போதே மாணவர்களின் சிந்தையில் சுக்குமிட்டாய் பாட்டி அமர்ந்துவிடுவார். இது ஒரு தொடர் நிகழ்வு. வயிறு பசிக்கிறது என்றால் சுக்கு மிட்டாய் பாட்டிதான் நினைவுக்கு வருவார்.

அப்படிப்பட்ட பாட்டி நான்கு நாட்களாக மிட்டாய் விற்க வரவே இல்லை. மாணவர்கள் தவித்துப் போய்விட்டனர். பலர் தங்கள் வீட்டில் தாய் தந்தையரிடம் சுக்கு மிட்டாய் பாட்டி பற்றி பேசினார்கள். அதில் பெரும்பாலானவர்கள், அய்யய்யோ அந்த சுக்கு மிட்டாய் பாட்டிக்கு என்ன ஆச்சோ தெரியவில்லையே என்று பரிதாபப்பட்டார்கள்.

சிலர் கவலை கொண்டனர். ஆனால் ஏழாம் வகுப்புப் படிக்கும் கிறிஸ்டோபரின் தந்தை மட்டும் அந்தச் சுக்கு மிட்டாய் பாட்டிக்கு என்ன ஆனது என்று தெரிந்து கொள்ள வேண்டும் என்று முடி செய்து, தன் மகனுக்கு பாட்டியைப் பற்றி தெரிந்த செய்திகளைக் கேட்டுக் கொண்டு, சுக்கு மிட்டாய் பாட்டியை தேடிப்போனார். இவருக்கு மட்டும் ஏன் இந்த அக்கறை என்று நினைக்கக்கூடும்.

அதற்கு காரணம், கிறிஸ்டோபர் ஒருமுறை சுக்கு மிட்டாயை தாளில் சுற்றி வீட்டிற்கு கொண்டு வந்திருந்தான். அதில் ஒன்றை அவனது அப்பா சுவைத்துப்பார்த்தார். அந்த மிட்டாய் செய்ய என்ன என்ன சேர்த்திருக்கிறார்கள், அது எந்த அளவிற்கு உடல் நலத்துக்கு நல்லது என்பதை அறிந்து, இப்படிப் பட்ட ஒரு மிட்டாயை நல்லெண்ணம் உள்ள ஒருவர்தான் தயாரித்திருக்க முடியும் என்று முடிவு செய்திருந்தார். வியாபார நோக்கு அதில் துளி அளவும் இல்லை. சிறு பிள்ளைகளின் உடல் நலத்துக்காகவே அந்த மிட்டாய் செய்யப்பட்டிருக்கிறது.

உணவு செரியாமை இந்த சுக்கு மிட்டாயால் சரியாகும். வாயுத்தொல்லை நீங்கும். உடலை சீரான வெப்ப நிலையில் வைத்துக் கொள்ளும் என்பது முதலான பல நன்மைகள் அந்த சுக்கு மிட்டாயில் இருப்பதை கிறிஸ்டோபரின் தந்தை கண்டுகொண்டார். அதனாலேயே தனது மகனுக்கு அந்த சுக்கு மிட்டாயை வாங்கிச் சாப்பிடுவதற்காக காசு கொடுத்து அனுப்பினார். அந்த மிட்டாயின் சிறப்புதான் பாட்டியைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும் என்ற மனநிலையை அவருக்குக் கொடுத்தது.

யார் யாரிடமோ கேட்டார், விசாரித்தார், இறுதியில் கண்டுபிடித்துவிட்டார். பாட்டியோ ஒட்டிய வயிறும் எலும்பும் தோலுமாக ஒரு குடிசையில் கிடந்தார். பாட்டி பாட்டி என்று நாலைந்து முறை கூப்பிட்டதும்தான் யாரு என்று கேட்டு எழ முயன்றார். கிறிஸ்டோபரின் தந்தையோ உள்ளே நுழைந்து, பாட்டி எழுந்திருப்பதற்கு உதவி செய்தார்.

பாட்டியிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். ஏன் நீங்கள் சுக்கு மிட்டாய் விற்கச் செல்லவில்லை என்று கேட்டார். பாட்டி மிகவும் கவலையோடு, அய்யா சுக்கு, கருப்பட்டி வாங்க வைத்திருந்த பணத்தை என்மகன் எடுத்துக் கொண்டு போய்விட்டான். நான் யாரிடம் சென்று கேட்பது? அதுதான் அப்படியே படுத்துவிட்டேன். என் மருமகள் எப்போதாவது கொஞ்சம் சோறு கொண்டுவந்து கொடுப்பாள் சாப்பிட்டு விட்டு இங்கேயே கிடக்கிறேன் என்றார்.

கிறிஸ்டோபரின் தந்தையோ, “நீங்க மறுபடி வியாபாரத்தைத் தொடங்க எவ்வளவு பணம் தேவை“ என்று கேட்டு அந்தப் பணத்தை பாட்டியிடம் கொடுத்து நீங்கள் தினமும் பள்ளிப் பிள்ளைகளுக்கு சுக்கு மிட்டாய் விற்பனை செய்யுங்கள். உங்களுக்கு வரும் இலாபத்தில் எனக்குத் தரவேண்டிய காசை கொஞ்சம் கொஞ்சமாக எனது மகனிடம் கொடுத்தனுப்புங்கள் என்றார்.

பாட்டிக்கோ பத்து வயது குறைந்துவிட்ட மகிழ்ச்சி. எழுந்தார் இருந்த கருப்பட்டியில் காப்பி போட்டு கிறிஸ்டோபரின் தந்தைக்குக் கொடுத்தார். அவரும் குடித்துவிட்டு விடை பெற்றார்.

எப்படித்தான் அந்தப் பாட்டி வேலை செய்தாரோ தெரியவில்லை, அடுத்த நாள் பள்ளிக்கருகில் இருந்த அரசமரத்தடியில் பாட்டி சுக்கு மிட்டாயோடு அமர்ந்திருந்தார்.

மாணவர்களுக்கோ அடக்கமுடியாத மகிழ்ச்சி. பாட்டியிடம் ஏன் நான்கு நாட்களாக வரவில்லை என்று கேட்டு மாணவர்கள் கோபித்துக் கொண்டார்கள். நான் தான் வந்துவிட்டேனே என்று சமாளித்தார்.

கிறிஸ்டோபர் கொடுத்த காசுக்கும் மேலாக ஒரு மிட்டாய் கொடுத்தார் பாட்டி. அவனோ வாங்க மறுத்து விட்டான். பாட்டியோ, "நீ வாங்கிக்கொள்ளவில்லை என்றால், நான் நாளைக்கு வரமாட்டேன்" என்று சொல்ல கிறிஸ்டோபர் வாங்கிக் கொண்டான். அப்பாவிடம் கொடுத்துவிடு என்று சொல்லி ஒரு சிறிய பொட்டலத்தையும் கொடுத்தார் சுக்கு மிட்டாய் பாட்டி. வீட்டிற்கு வந்த கிறிஸ்டோபர், காகிதத்தால் பொதியப்பட்டு சிறுநூலால் கட்டப்பட்ட பொட்டலத்தை தந்தையிடம் கொடுத்து பாட்டி கொடுத்ததாகச் சொன்னான்.

அதோடு காசுக்கு அதிகமாக தனக்கு பாட்டி கொடுத்த மிட்டாய் பற்றியும் கூறினான். வாங்கிக் கொள்ளாவிட்டால் நாளைக்கு வரமாட்டேன் என்று பாட்டி கூறியதையும் சொன்னான். கிறிஸ்டோபரின் தந்தை கண்களில் கண்ணீர் திரண்டது.

அடுத்தநாள் காலையிலேயே சுக்குமிட்டாய் பாட்டியின் வீட்டிற்கு கிறிஸ்டோபரின் தந்தை சென்று, இன்னும் அதிகம் பணம் தந்தால் உங்களால் சுக்குமிட்டாய் அதிக அளவில் செய்து தர முடியுமா என்று கேட்டார். முடியும் என்று சிரித்த முகத்தோடு பாட்டி கூறினார். "நான் உங்களுக்குத் துணையாக ஒரு அம்மாவையும் அனுப்புகிறேன், நீங்கள் இன்னும் அதிகமாக மிட்டாய்கள் செய்து கொடுங்கள் நான் விற்பனை செய்து தருகிறேன் என்றார்.

அடுத்த நாளே சுக்கு மிட்டாய்களின் எண்ணிக்கை அதிகமானது. மாணவர்களின் தேவைக்குப் போக மற்றவற்றை கிறிஸ்டோபரின் தந்தை வாங்கி கடைகளுக்கு விற்பனை செய்தார். மிட்டாயின் சுவையினால் விற்பனை சூடுபிடித்தது. வேலை ஆட்கள் அதிகரித்தனர். கிறிஸ்டோபரின் தந்தையும் பாதி நாளை சுக்கு மிட்டாய் விற்பனைக்காக பயன்படுத்தினார்.

சுக்கு மிட்டாய் சந்தையில் நல்ல பெயரைப் பெற்றது. சுக்கு மிட்டாய் என்ற அந்தத் தயாரிப்பு பாட்டியின் எண்ணத்திலும் கைப்பக்குவத்திலும் வந்தது என்பதால், அதன் விற்பனை குறியீடை அவரது பெயரில் பதிவு செய்தார் கிறிஸ்டோபரின் தந்தை. பாட்டியின் மகனை அழைத்து அவனையும் வியாபாரத்தில் பங்குதாரராக்கி அவனது பழைய நடவடிக்கைகள் அனைத்தையும் மாற்றினார். இன்றளவும் பாட்டியின் சுக்கு மிட்டாய் தின்பண்டமாகவும், மருந்தாகவும் மக்களால் விரும்பி வாங்கப்படுகிறது.

**இருங்கோவேள்.**


## முற்றம் இதழுக்கான விளம்பரக் கட்டணங்கள்

பின்னட்டை பல வண்ணம் ரூ. 10,000/-
பின் உள் அட்டை பல வண்ணம் ரூ. 7,000/-
கருப்பு வெள்ளை முழுபக்கம் ரூ. 5,000/-
கருப்பு வெள்ளை அரைப் பக்கம் ரூ. 2500/-
க. வெ. கால் பக்கம் ரூ. 1500/-

சந்தா விவரம்: தனி இதழ் ரூ. 10/-
ஆண்டு சந்தா ரூ. 120/-


# மாவட்ட நீதிமன்றங்களில் தமிழ்க்கொடி

மாவட்ட நீதிமன்றங்களில் தமிழில் மட்டுமே தீர்ப்புகள் எழுதப்பட வேண்டும் என்று மதுரை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட நீதிமன்றங்களிலும் தமிழில் மட்டுமல்லாமல் ஆங்கிலத்திலும் தீர்ப்பு எழுதலாம் என்று கடந்த 5.1.1994 அன்று உயர் நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் அனைத்து மாவட்ட நீதிமன்றங்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பி னார். இந்தச் சுற்றறிக்கையை ரத்து செய்யக்கோரி மதுரை உயர்நீதிமன்றக் கிளையின் வழக்கறிஞர்கள் உண் ணாவிரதம், ஆர்ப்பாட்டம், மனிதச் சங்கிலிப் போராட்டம் போன்ற போராட்டங்களை நடத் தினர்.

இருந்தபோதிலும், அந்த சுற்றறிக்கை ரத்து செய்யப்படவில்லை. இதைத் தொடர்ந்து அந்த சுற்றறிக்கை தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்துக்கு எதிரானது என்றும், எனவே, அந்த சுற்றறிக்கையை ரத்து செய்துவிட்டு மாவட்ட நீதிமன்றங்களில் தமிழில் மட்டுமே தீர்ப்புகள் எழுதப்பட வேண்டும் என்றும் உத்தரவிடக்கோரி வழக்கறிஞர்கள் ரத்தி னம், சோலை சுப்பிரமணியன் ஆகியோர் மதுரை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தனர்.

இந்த மனு, நீதிபதிகள் வீ.ராமசுப்பிரமணியன், வி.எம்.வேலுமணி ஆகியோர் முன்னிலையில் விசார ணைக்கு வந்தது. மனுவை விசாரித்த நீதிபதிகள் இந்த வழக்கில் தீர்ப்பு அளித்தனர். தீர்ப்பில், தமிழகத்தில் 1956 ஆம் ஆண்டு ஆட்சிமொழிச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்படி, தமிழகத்தில் தமிழ் ஆட்சி மொழியானது. ஆனால், நீதிமன்றங் களில் தமிழ் ஆட்சி மொழியாக்கப்படவில்லை. இதைத் தொடர்ந்து 1976ஆம் ஆண்டு தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்பட் டது. அதாவது, மாவட்ட நீதிமன்றங் களில் சாட்சி விசாரணை தமிழில்தான் நடக்க வேண்டும்.





தீர்ப்புகள் தமிழில்தான் எழுதப்பட வேண்டும் என்பதுதான் அந்தத் திருத்தம் ஆகும்.

இந்தச் சட்டத்திருத்தம், அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு எதிரானது என்றும், எனவே, அந்தச் சட்டத்திருத்தத்தை ரத்து செய்ய வேண்டும் என்றும் வழக்கறிஞர் ரெங்கா என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத் தார். அந்த வழக்கை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. அதன்பின்பு, தமிழை தாய் மொழியாகக் கொண்டிராத மாவட்ட நீதிமன்ற நீதிபதிகள் தங்களுக்கு விதி விலக்கு அளிக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

அதன் அடிப்படையில் உயர்நீதிமன்ற மூத்த நீதியரசர்கள் குழு எடுத்த முடிவின்படி உயர்நீதிமன்றப் பதிவாளர் ஜெனரல் மாவட்ட நீதிமன்றங்களில் தமிழில் மட்டுமல்லாமல் ஆங்கிலத்திலும் தீர்ப்பு எழுதலாம் என்று சுற்றறிக்கை அனுப்பி, தமிழ் ஆட்சிமொழிச் சட்டத்தில் தமிழ் தெரியாத நீதிபதிகளுக்கு தமிழில் தீர்ப்புகளை எழுத குறிப்பிட்ட காலம் வரை அவகாசம் அளிக்கலாம் என்று கூறப் பட்டுள்ளது.

ஆனால் உயர்நீதிமன்றப் பதிவாளர் ஜெனரல் பிறப்பித்த உத்தரவு நிரந்தரமான ஒன் றாக உள்ளது. இந்த உத்தரவு, தமிழ் ஆட்சி மொழிச் சட்டத்துக்கு எதிரானதாகும். எனவே, உயர்நீதிமன்ற பதிவாளர் ஜெனரல் பிறப்பித்த உத்தரவு ரத்து செய்யப்படுகிறது.

தமிழைத் தாய்மொழியாக கொண்டிராதவர் கள் தமிழகத்தில் பணியாற்றும் போது தமிழ்நாடு சார்நிலை பணியாளர் பொது விதிகளின்படி தமிழநாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் தமிழ்மொழித் தேர்வில் குறிப்பிட்ட காலத்துக்குள் தேர்ச்சி பெற வேண்டும். தமிழை தாய்மொழியாகக் கொண்டிராத நீதிபதிகள், இந்த விதிப்படி குறிப்பிட்ட காலத்துக்குள் தமிழ்த் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும். என்று தீர்ப்பு கூறுகிறது. இந்தத் தீர்ப்பின் மூலம் மாவட்ட நீதிமன்றங்களில் இனி தமிழில் மட்டுமே தீர்ப்புகள் எழுதப்பட வேண்டும் என்பது நடைமுறைக்கு வந்துள்ளது. வாழ்க தமிழ்!

**வழக்கறிஞர் இமயவரம்பன்**

---

உலகில் இருக்கும் மொத்த மொழிகளின் எண்ணிக்கை 6809. இவற்றில் 700க்கும் உட்பட்ட மொழிகளில் மட்டும்தான் எழுதவும் பேசவும் முடியும்.

சொந்த வரிவடிவத்தில் எழுதப்படும் மொழிகள் வெறும் 100 மட்டுமே

இவற்றுக்கெல்லாம் தாயாக, மூலமொழியாக திகழ்பவை 6 மொழிகள் மட்டுமே என கண்டறியப் பட்டுள்ளது

1. எபிரேய மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
2. கிரேக்க மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
3. இலத்தீன் மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
4. சமஸ்கிருத மொழி (பேச்சு வழக்கில் இல்லை)
5. தமிழ் மொழி
6. சீன மொழி

**டேவிட் கிறிஸ்டோபர் ஆனந்த்.**



தமிழீழத்தின் வெற்றி!

பிரான்சில் முதலாவது உலகமக்கள் உதைபந்தாட்ட கிண்ணத்தை வென்றது பிரான்சு தமிழீழ உதைபந்தாட்ட அணி.

ஜூன் 29 ஞாயிற்றுக்கிழமை, பிரான்சு, பாரிசு நகரில் நடைபெற்ற உலக மக்கள் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிரான்சு நாட்டின் தமிழீழ உதைபந்தாட்ட அணி, இறுதிப் போட்டியில் தென் சகாரா அணியை 6க்கு 3 என்ற இலக்கில் வெற்றியீட்டி முதலாவது மக்கள் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டது.

காலனித்துவ ஆட்சியால் பாதிக்கப்பட்ட நாடுகள், காலனித்தவ ஆட்சியால் பாதிப்புக்கு உள்ளான மக்களின் பாதுகாப்புக்கு போராடும் அமைப்புடன் பிரான்சு தமிழீழ மக்கள் பேரவை, குர்திசுதான் மக்கள் அமைப்பும் ஒன்று சேர்ந்து நடத்திய இந்த முதலாவது உலக மக்கள் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில் பிரான்சைச் சேர்ந்த குர்திஸ்தான், புதிய கல்டோனியாவின் உரித்துடைய கணக் மக்கள் அணி, தென் சகாரா அணி, பிரேசில் சிக்க மண்டோசு மக்கள் அணி, ஆப்பிரிக்க காலனி ஆட்சியால் பாதிக்கப்பட்ட மக்கள் அணி, ரோம் அணி ஆகியவற் றுடன் தமிழீழ உதைபந்தாட்ட அணியும் இந்த முதலாவது உலக மக்கள் கிண்ணப் போட்டியில் கலந்து கொண்டன.

பிரான்சில் பிரசித்தி பெற்ற Stade de France மைதானத்துக்கு அருகில் உள்ள Petit Stade மைதானத்தில் இந்தப் போட்டியை பத்திரிகையாளர்கள் முன்னிலையில் செயிண்ட் டெனிஸ் நகரத் தந்தை ஆரம்பித்து வைத்தார். அவர் தனது பேச்சில் மக்களுக் கான மக்கள் மயப்படுத்தப்பட்ட இந்த உதைபந்தாட்டப் போட்டி மக்கள் இடையே நல்லுறவுகளை வளர்க்கும் என்றும், அடுத்த ஆண்டு இந்தக் கிண்ணத்திற்கான போட்டியை மிகச் சிறப்பாக நடத்த தமது முழு ஆதரவும் இருக்கும் என்றும் கூறினார்.

பிரான்சில் தமிழ் மக்கள் இடையே திறமையான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்காகவே செயல்படும் தமிழீழ விளையாட்டுத்துறை, உதைபந்தாட்ட சம்மேளனம் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கும் எமது பாராட்டை நாம் தெரிவித்துக் கொள்கிறோம்.

*செய்தி : தமிழீழ மக்கள் பேரவை பிரான்சு*

## சினிமா.. சினிமா துணுக்குகள்

கதைக்கு தக்கபடி தனது தோற்றத்தை மாற்றிக் கொள்ளும் நாயகர்களில் விஜய் சேதுபதியும் ஒருவர். இவர் தற்போது ஆரஞ்சு மிட்டாய் என்ற புதிய படத்தில் 55 வயது தாத்தாவாக நடித்து வருகிறார்.

நிஜவாழ்க்கையில் தனது பிள்ளைகள் கல்லூரிக்குச் சென்று கொண்டிருக்கும் சூழலிலும், சிலர் திரையில் கல்லூரி செல்லும் நாயகர்களாக நடித்ததுண்டு. ஆனால், தற்போது அந்த நிலை மாறி கதைக்கு தகுந்த படி நடிக்கும் பக்குவ நிலையில் சில நாயகர்கள் உள்ளனர். விஜய் சேதுபதி அவர்களில் முக்கியமானவர்.

அறிமுகமான புதிதிலேயே சூது கவ்வும் படத்தில் 40 வயதுக்காரராக நரை முடி தோற்றத்தில் துணிந்து நடித்திருந்தார் விஜய் சேதுபதி.

இந்நிலையில் தற்போது தனது புதிய படமான ஆரஞ்சு மிட்டாயில் 55 வயது தாத்தாவாக நடிக்க இருக்கிறார். அதுவும் நோயாளித் தாத்தாவாக.

# துளசி விதை

நலவீரன் தனது 18ஆம் வயதில் நகரத்திற்கு வேலைதேடிப் புறப்பட்டான். நகரத்திற்கு வந்த பின்புதான் அவன் திரைப்படங்கள் பார்க்க ஆரம்பித்தான். நலவீரன் ஒரு மெழுகுவர்த்தி தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தான். அது ஒரு சிறிய நிறுவனம். அவனுடன் சேர்த்து ஐந்துபேர்தான் அங்கே வேலை செய்தனர். ஞாயிறு மட்டும்தான் விடுமுறை. அன்று காலையில் எழுந்து ஆறு நாட்கள் அணிந்த துணிகளை எல்லாம் வைத்து காயப்போட்டுவிட்டு நிதானமாக சமைத்து நன்றாக பசி எடுத்ததும் சாப்பிட்டுவிட்டு, இரண்டு மணி நேரம் தூங்கி எழுந்து, திரைப் படம் பார்க்கச் செல்வான். இதுதான் அவனது ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை நடவடிக்கைகள்.

நலவீரன் பார்த்த திரைப்படம் ஒன்றில், திருமணமான பெண் ஒருவர் துளசிச்செடியை சுற்றிச்சுற்றி வந்து வணங்கும் காட்சி ஒன்று இடம்பெற்றிருந்தது. அந்தக் காட்சியைப் பார்த்த அவனுக்கு பழைய நிகழ்வுகள் நினைவுக்கு வந்தன. ஏழாம் வகுப்பு படிக்கும்போது நலவீரனின் அண்ணன் ஆநிறைகொண்டானும் அவனது நண்பர்களும் சேர்ந்து கொல்லையில் நின்ற துளசிச்செடிகளை எல்லாம் பிடுங்கிக் கொண்டு வந்து, வீட்டிற்கு முன்புறம் உள்ள வேப்ப மரத்தடியில் வைத்து, துளசி விதைகள் எல்லாவற்றையும் உதிர்த்து, தூசிகளைக் போக்க வாயினால் ஊதி ஊதி சுத்தமாக்கினார்கள். பின்னர் அந்தத் துளசி விதைகளை, நீர் நிறைந்த ஒரு மண்தோண்டியில் போட்டார்கள். சிறிது நேரம் கழித்து எல்லோரும் குவளையில் எடுத்துக் குடித்தனர். அதில் நலவீரனுக்கும் பங்கு கிடைத்தது.

துளசிவிதைதண்ணீர் மிகவும் சுவையாக இருந்தது. பள்ளிக்கூட முழு ஆண்டுத்தேர்வு முடிந்து விடுமுறை நாட்களான அந்த மே மாதம் மிகவும் வெப்பமாக இருந்தது. அந்த நாட்களில் இந்தத் துளசி விதைத் தண்ணீர் நாக்கிற்கும்



உடலுக்கும் மிகுந்த குளிர்ச்சியைத் தந்தது. நலவீரன் மகிழ்ந்து போனான். அவன் ஊருக்கு எப்போதாவது ஒருவர் ஐஸ் கொண்டுவருவார், அதில் சேமியா ஐஸ், குச்சி ஐஸ், பால் ஐஸ் என்று வகைகள் இருக்கும். அதில் சேமியா ஐஸ் சாப்பிடும்போது அதில் உள்ள சேமியா, ஜவ் வரிசி தரும் சுவையை அந்த துளசிவிதைத் தண்ணீர் தந்தது. அந்த நிகழ்ச்சிக்குப் பின்னால் கோடை வந்துவிட்டாலே நலவீரன் தானாகவே சென்று துளசிவிதை சேகரித்து, தண்ணீர் குடிப்பதை வழக்கமாக வைத்துக் கொண்டான்.

அந்தத் துளசிச்செடியை திரைப்படத்தில் ஒரு பெண் சுற்றிச் சுற்றி வந்து வணங்குவதைக் கண்டதும், துளசிக்கு இன்னும் பல நற்குணங்கள் இருக்குமோ என்று அறிய அவன் மனம் துடித்தது. அதுபற்றித் தெரிந்து கொள்ள அவன் தினந்ததோறம் வேலைக்குச் செல்லுகிறபோது கடக்கின்ற ஒரு பகுதியில் இருந்த நாட்டு மருந்துக் கடையில் விசாரித்தான். அவர் துளசியின் மருத்து வகுணங்கள் பலவற்றைச் சொன்னார். அனால் இவன் சுவைத்த அந்த குளிர்ச்சியைப் பற்றிச் சொல்லவில்லை. நலவீரனோ அதைப் பற்றி அந்த கடைக்காரரிடம் கூறியபோது அப்படியா தம்பி! நானும் அதைக் குடித்துப் பார்க்கிறேன் என்றார்.

துளசிக்கு எத்தனையோ மருத்துவக் குணங்கள் உண்டு என்று மனதிற்குள் மகிழ்ந்த நேரத்தில் தான், தமிழர்களின் முறையை எண்ணி வியந்தான். துளசிச் செடியின் மருத்துவக் குணங்களுக்காகத்தான் அதை, குடும்ப நலனில் அக்கறை கொண்டிருக்கிற பெண்கள் சுற்றிவந்து, கும்பிடவேண்டும் என்ற நடைமுறையைக் கொண்டு வந்திருப்பார்கள் என்று எண்ணிக்கொண்டான்.

அது எப்படி இருந்தாலும் துளசிவிதை ஊறிய மண்பானைத்தண்ணீர் இன்று நினைத்தாலும் நலவீரனின் உடலையே குளிர்வித்தது. இயற்கை தரும் உணவு, மருந்தாகி மனிதனை காக்கும் என்பது தமிழ்ச் சமுதாயத்தைத் தவிர வேறு எங்கும் இல்லை என்பதுதான் நிரந்தரமான உண்மை.

**இருங்கோவேள்.**

## வெளிச்சம் வெளியில் இல்லை



வெளிச்சம் என்றவுடன்
கதிரவனும் நிலவும்
நட்சத்திரங்களும்
விளக்குகளும்
நினைவில் நிழலாடும்
அவை வெளிச்சம்தான்
என்றாலும்
அக வெளிச்சம்
ஒன்று உண்டு
அறிவைத் தரும்
கல்விதான் அது
புற வெளிச்சத்தையும் அது
உணரவைக்கும்.

வெளிச்சம் என்பது இறைமை
வெளிச்சம் என்பது உயிர்ப்பு
வெளிச்சம் என்பது அறிவு
வெளிச்சம் என்பது பார்வை
வெளிச்சம் என்பது கருணை
வெளிச்சம் என்பது விடுதலை
வெளிச்சம் வெளியில் இல்லை
மனிதத்திற்குள்ளேயே இருக்கிறது.

**வைரி**

நாடு முழுவதும் மீட்டர் வட்டி, விரைவு வட்டி என்ற பெயர்களில் கந்துவட்டிக்கு கடன் வாங்கி அதை திருப்பிக் கொடுக்க முடியாமல், பலர் தற்கொலை செய்து கொள்ளும் சம்பவம் ஆங்காங்கே நடந்த வண்ணம் உள்ளன. ஆனால், இவ்வாறு கடன் தொல்லையில் மாட்டிக் கொண்டு தப்பிக்க முடியாமல் திணறும் நபர் களுக்கு எந்த நிவாரணமும் கிடைக்காத பட்சத் தில்தான் தற்கொலை முடிவினை அவர்கள் மேற்கொள்கின்றனர்.

அப்படி கடன் தொல்லை யில் சிக்கித் தவிக்கும் நபர்களுக்கு நிவாரணம் வழங்கும் விதமாகவும், அவர்களை தற்கொலை முடிவுக்குச் செல்லாமல் காப்பாற்றும் விதமாகவும் சென்னை சிட்டி சிவில் கோர்ட்டு அண்மையில் ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளது.

சென்னை ஒன்பதாவது உதவி சிட்டி சிவில் கோர்ட்டில் கோர்ட்டில், மீஞ்சூரைச் சேர்ந்த சாகுல் அமீது என்பவர் ஒரு வழக்குத் தொடர்ந்திருந்தார் அதில், தியாகராயர் நகரைச் சேர்ந்த மீரான்கனி என்பவரிடம் 2011ஆம் ஆண்டு பல்வேறு தேதிகளில் நான்கு தவணை யாக ரூ 20 லட்சம் கடன் வாங்கினேன். இந்தத் தொகைக்கு மாதம் வட்டி 10 விழுக்காடு என்று நிர்ணயம் செய்யப்பட்டது. இதன்படி, மாதம் இரண்டு லட்சம் வட்டித்தொகையை 2013ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை மீரான்கனிக்கு செலுத்தி வந்தேன்.

இதன்பின்னர் தொழில் நஷ்டம் காரணமாக அவருக்கு பணம் கொடுக்க முடியவில்லை. இதையடுத்த மாம்பலம் போலீசில் என் மீது மீரான்கனி புகார் செய்தார். போலீசார் என் வீட்டுக்கு வந்து குடும்ப உறுப்பினர்களை மிரட்டினார்கள். இதனால் சிவில் பிரச்சினையில் போலீசார் தலையிடக் கூடாது என்று சென்னை உயர்நீதிமன்றத்தில் காவல்துறையினருக்கு எதிராக தடைஉத்தரவு பெற்றேன்.

# அநியாய வட்டியைக் கட்டாதீர்கள்



தமிழ்நாடு கடன் வழங்குவோர் சட்டப்பிரிவு 7 இன்படி கடன் கொடுத்தவர்கள், கடன் வாங்கியவர்களிடம் அதிகபட்சமாக ஆண்டுக்கு12 சதவீத வட்டிதான் வசூலிக்க வேண்டும். அப்படிப் பார்க்கும்போது, மாதத்துக்கு ஒரு விழுக்காடு வட்டித்தொகையைத்தான் வசூலிக்க வேண்டும். ஆனால், என்னிடம் பத்த சதவீத வட்டித் தொகையை அதாவது கூடுதலாக ஒன்பது விழுக்காடு வட்டியை மீரான்கனி வசூலித்துள்ளார். எனவே, என்னிடம் அதிகமாக வசூலித்த வட்டித்தொகையை(ஒன்பது விழுக்காட்டை) அசல்கடன் (இருபது இலட்சத்தில்) தொகையில் கழிக்க வேண்டும் என்று மீரான் கனிக்கு உத்தரவிட வேண்டும். என்று கூறியிருந்தார்.

இந்த மனு நீதியரசர் குமணன் அவர்கள் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது, மனுதாரர் சார்பில் வழக்கறிஞர் சிராசுதீன் முன்னிலையாகி வாதிட்டார். இதையடுத்து, மனுவுக்குப் பதில் அளிக்கும்படி மீரான்கனிக்கு நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. ஆனால், அவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகவில்லை. இதையடுத்து, இந்த வழக்கை விசாரித்த நீதியரசர் குமணன் தீர்ப்புக் கூறினார். இந்த வழக்கில் மனுதாரரின் வாக்குமூலம் மற்றும் அவர் வழங்கிய சாட்சி ஆவணங்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், மனுதாரர் வாங்கிய இருபது லட்சம் கடன் தொகையை விட, கூடுதலாக ரூ. 23. 58 லட்சம் செலுத்தியுள்ளர்.

எனவே தமிழ்நாடு கடன் சட்டத்தில் கூறப்பட்டுள்ள வட்டி தொகையைவிட அதிகமாக மனுதாரர் செலுத்தியுள்ளர் என்று முடிவு செய்யப்படுகிறது. இதனால், எதிர் மனுதாரர் மீரான்கனிக்கு, மனுதாரர் சாகுல் அமீது முழு கடன் தொகையையும் செலுத்தி விட்டார் என்றும், கடன் பாக்கி எதுவும் இல்லை என்றும் அறிவிக்கப்படுகிறது என்ற தீர்ப்பு பலருக்கு ஒரு துணிவைக் கொடுத்துள்ளது. அநியாயமாக, அடாவடியாக வட்டி வாங்கும் சண்டாளர்கள் இனிமேலாவது திருந்துவார் களா? நகைகளையும் வாங்கிக் கொண்டு, ஆண்டுக்கு 36 விழுக்காடுக்கு மேல் வட்டி வாங்கி விழுங்கும் மனிதாபிமானமற்ற விலங்குகள் எல்லாம் திருந்துவார்களா? அரசும் நீதிமன்றங் களுமே அறத்தை நிலை நிறுத்த வேண்டும்.

உமா மகேசுவரி.

# மௌனம் காக்கும் இந்திய அரசு



ஈராக்கில் ஐஎஸ்ஐஎஸ் தீவிரவாதிகளின் பிடியில் சிக்கித் தவித்த இந்திய நர்ஸ்களையும், இதர இந்தியர்களையும் மீட்பதில் ஈராக் அரசும், ஈராக் ராணுவமும் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு தரவில்லை. இதையடு படு புத்திசாலித்தனமாக மறைந்த சதாம் உசேனின் பாத் கட்சியைச் சேர்ந்த முக்கியஸ்தர்களிடமும், தீவிரவாதிகளுக்கு நெருக்கமானவர் களிடமும் இந்திய அரசே நேரடியாக தொடர்பு கொண்டு பேசி காரியத்தைச் சாதித்து அசத்தியுள்ளது.

பலமுனைகளிலும் இதற்கான முயற்சிகளை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜூம், பிரதமர் அலுவலகமும் மேற்கொண்ட விதம் அயரடிப்பதாக உள்ளது.

இப்படிப்பட்ட முயற்சிகளை இந்திய அரசு இதுவரை மேற்கொண்டதாகத் தெரியவில்லை. அந்த அளவுக்கு பலவிதங்களிலும் தொடர்ந்து முயற்சி செய்து, இந்தியா மீது மதிப்பு வைத்துள்ள சதாம் உசேனின் கட்சியினர் மூலம் காரியத்தை சாதித்து அத்தனை பேரையும் பத்திரமாக மீட்டுள்ளது இந்தியா. நர்ஸ்கள் உள்ளிட்டோரை மீட்பதில் சதாமின் பாத் கட்சியினர்தான் பெரும் பங்கு வகித்துள்ளதாக தகவல்கள் கூறுகின்றன.

பாத் கட்சியினர் ஐஎஸ்ஐஎஸ் அமைப்புக்கு நெருக்கமானவர்கள். ஈராக் பிரதமர் நூர் அல் மாலிக்கி அரசுக்கு எதிராக ஆயுதமேந்திப் போராடி வருபவர்களும் கூட. மேலும் ஐஎஸ்ஐஎஸ் அமைப்பில் இணைந்து செயல்பட்டு வரும் பல்வேறு சன்னி குழுக்களும் கூட இந்தியாவுக்காக உதவியுள்ளனவாம்.


Owned, Published and Printed by **V. Thalapathi,** Published from No. 13/5, Buddha Street, Rangarajapuram, Kodambakkam, Chennai - 24. and Printed at **DESIGNS PARK,** No. 22 weavers street triplicane, chennai-5, Editor: **V. THALAPATHI.**


“உளியின் அழகு சிலையிலே
உங்களின் அழகு
ராம் டெக்ஸ்டைல்ஸ் ஆடையிலே”
உங்கள் ராம்
டெக்ஸ்டைல்ஸ் A/c
நேரு வீதி, திண்டிவனம்.

MUTRAM - Tamil & English Monhtly R.Dis No. 1678-2012
RNI No. TNBIL/2010/36924




கல்வியையும், வேலையையும் வழங்கி,
பலரது வாழ்வாதாரத்தை உயர்த்திய,
நல்லெண்ண மாமனிதர்
திரு. **நாசே இராமச்சந்திரன்** அவர்கள்
வளங்கள் பல பெற்று நலமுடன்
நூறாண்டு வாழ வாழ்த்துகிறோம்!

